இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 21 திகதி: 11.11.2018 விலை : 20.00

## அரசியல் தலைவர்கள் நாட்டின் எதிர்கால நலன்கருதி செயற்படவேண்டும்

### இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

இலங்கையில் தோன்றியுள்ள அரசியல் அசாதாரண நிலை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அறிக்கையின் விபரம் வருமாறு:

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது நாட்டில் தோன்றியுள்ள நிகழ்கால அரசியல் அசாதாரண நிலை குறித்து அக்கறை கொண்டுள்ளது.

சீர்குலைக்கப்பட்டுள்ள அரசியல் செயற்பாடுகளினால் ஏற்படுகின்ற விளைவுகள் மற்றும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பது நாட்டு மக்களே என்பதை அனைவரும் நினைவிலிருத்திக்கொள்ளவேண்டும்.

எம் நாட்டின் அனைத்து அரசியல் தலைவர்களிடமும் நாம் வேண்டிக் கொள்வது, குறுகிய மனப்பான்மையுடன் பயனற்ற விதத்தில் சிந்திக்காது, நாட்டின் எதிர்கால நலன் கருதி, இபபோது உருவெடுத்துள்ள கிளர்ச்சிகரமான நிலைக்கு தீர்வுகாண்பதற்கு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் யாப்பிற்கு ஏற்ப இன்றையபிரச்சினையைத் தீர்க்க அரசியல் கட்சிகள் தமது சுய விருப்பு வெறுப்புக்களை விடுத்து முன்வர வேண்டும்.

எமது நாடு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து, அளவுக்கதிகமான இரத்தத்தைச் சிந்தியுள்ளது. நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் நிதானத்துடனும் கவனத்துடனும் செயற்படும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்தக் குழப்பகரமான தருணத்தில் எந்த முடிவு-களை எடுத்தாலும் அங்கு அரசியல் யாப்பை பிரமாணிக்கமாகப் பின்பற்றிய சட்ட ஒழுங்கும், ஜனநாயக வரம்பும் மேலோங்கி நிற்கவேண்டும்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## மக்களைச் சிந்திக்கத் தூண்டும் கலை இலக்கியப் பணிகள் எம் சமூகத்தில் வளரவேண்டும்

### அருட்பணி செ.அன்புராசா அமதி அடிகளாரின் நூல் வெளியீட்டு விழாவில் யாழ் ஆயர்



யாழ் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் செ.அன்புராசா அமதி அடிகளா-ரின் மனுவுக்கு மனு! (கவிதை), அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும் (சிறுவர் கதை), அதிர்வுகள் - 02 (சமூக மானிட வியல் கட்டுரை) ஆகிய 03 நூல்களின் வெளியீட்டு நிகழ்வு 03.11.2018 சனிக்கிழமை, யாழ் 'கலைத்தூது கலையகத்தில்' இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் தமதுரையில், அன்புராசா அடிகளாரின் பெற்றோரை வாழ்த்துகின்றேன். ஏனெனில், பெரிய குடும்பமாக இருந்தாலும் தங்களிடம் உள்ளதை அவர்கள் தம் பிள்ளைகளுக்குக் கொடுத்து வளர்த்திருக்கின்றார்கள். அடுத்து, இந்நூல்களை அன்புராசா அடிகளார் வெளியிட்டமைக்காக அவருக்கு எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'இந்நிகழ்வுக்கு நீங்கள் வரவேண்டும்' என என்னை அழைத்திருந்தார். அதற்காக அவருக்கு நன்றிகூறுகின்றேன். அன்புராசா அடிகள் தன்னுடைய குருத்துவப் பணியோடு, சமூகப் பணிகளோடு நூலாக்கப் பணிகளையும் செய்திருக்கின்றார். இது எனக்கு மிகவும் பிடித்த ஒரு விடயம். ஒரு குருவாகத் தனது பணிகளை பல்வேறு இடங்களில் செய்து, சமூகப் பணிகளை ஆற்றி, இந்நூல்களையும் எழுதியிருக்கின்றார். என்னிடம் வருகின்றவர்கள், 'நேரமில்லை நேரமில்லை' என்றுதான் அதிகமா-கச் சொல்லுகின்றார்கள். நான் அவர்களிடத்தில், 'வாசிப்பதற்காக நேரத்தை வாங்குங்கள், எடுத்துக்கொள்ளுங்கள், நேரத்தைத் திருடுங்கள்' எனக் கூறுவதுண்டு.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் நாட்டின் பிரச்சினை தீர்க்கப்படாது; தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் இவ்வாறு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தற்போது நாட்டில் எழுந்துள்ள நிலைமை தொடர்பில் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களைச் சந்தித்தபோதே ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களும் இலங்கையர்கள் என்று

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்த ஞானொடுக்கம்

யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்த ஞானொடுக்கம் இரு பிரிவு-களாக நடைபெற்று வருகின்றது. முதற் குழுவினருக்கான ஞானொடுக்கம் கடந்த வாரம் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது. இத் தியானத்தில் 54 குருக்கள் பங்கெடுத்தனர். இரண்டாவது குழுவினருக்கான தியானம் எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இத் தியானங்களை திருச்சி சலேசியன் சபையின் முன்னாள் மாகாண முதல்வர் அருட்பணி தியோபிலஸ் ஜேம்ஸ் அடிகளார் நெறிப்படுத்தி வருகின்றார். குருக்களின் இத்தியான நாட்களில் இறைமக்களாகிய உங்களின் செபங்களை குருக்கள் வேண்டி நிற்கின்றனர்.

## அருட்பணி மகேந்திரன் அடிகளார் இறைபதம் அடைந்தார்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி T.மகேந்திரன் இராஜநாயகம் அடிகள் கடந்த 06.11.2018 அன்று இறைபதமடைந்தார்.

அருட்பணி மகேந்திரம் அடிகளார் யாழ், மன்னார் மறைமாவட்டங்களிலும், அமெரிக்காவில் கலிபோர்னியாவிலும் இறைபணி புரிந்தார். இவர் தாயகத்தின் அரிப்பு, இளவாலை, கிளிநொச்சி, தாழையடி, பாசையூர் பங்குகளில் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். அடிகளார் காலஞ்சென்ற அருட்பணி T.அன்ரன் இராஜநாயகம் அடிகளாரின் அன்புச் சகோதரன் ஆவார். அடிக-ளாரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற பாதுகாவலன் வாசக நெஞ்சங்களின் செபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

## இரணைதீவு புனித செபமாலை மாதா ஆலயம் யாழ் ஆயரால் திறந்து வைப்பு



இரணைதீவு புனித செபமாலை மாதா ஆலயம் 27.10.2018 அன்று யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. போர் மற்றும் மக்களின் இடப்பெயர்வு காரணமாக 26 வருடங்களாக புனரமைக்கப்படாதிருந்த மேற்படி ஆலயம் யாழ் ஆயரின் அயராத முயற்சியினால் இலங்கை கடற்படையினர் மற்றும் இரணைதீவு வாழ் கிறிஸ்தவ மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருப்பீடம் இயேசுவின் பிரசன்னம் நீங்கள் இயேசுவின் பணியாளர்கள்

### பீடப்பணியாளர்கள் பாசறையில் குருமுதல்வர்



தீவக மறைக்கோட்டப் பங்குகளில் பீடப்பணியாளர்களுக்கான பாசறை இம்மாதம் 2, 4ம் திகதிகளில் சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் நடைபெற்ற போது அவர்களுக்கு திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இயேசுவே குருவும், பலிப்பொருளும், பலிப்பீடமும் என்பதை விளக்கி நீங்கள் ..

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## தென்னிலங்கை அரசியல் கற்றுத்தரும் பாடம்

அரசியலில் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற ஒரு நிலை மனிதகுல வரலாற்றில் அரசுகள் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்து நிலவி வருகின்றது. அரசியலில் ஏற்பட்டு வருகின்ற நிலை மாற்றங்கள் மற்றும் ஆட்சிக் கவிழ்ப்புகள் அரசியல் தலைவர்களாலும், அரசியல்வாதிகளாலும் அவர்களின் நலன் கருதி அல்லது அவர்கள் சார்ந்த கட்சிகளின் நலன் கருதி மேற்கொள்ளப்படுகின்றன என்பதே ஆழ ஊடுருவி நோக்கும் போது தெட்டத்தெளிவாக தென்படும் விடயமாகும். எது எவ்வாறாக இருப்பினும் இவ்வாறு அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்களால் பெரிதும் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர்.

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இலங்கை வாழ் மக்களை பெரிதும் திகைக்க வைத்ததுடன் பன்னாடுகளையும் அதிர்ச்சிக்குள் தள்ளியது. நல்லாட்சி அரசாங் கத்தை அமைப்போம் எனக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்க விட்டு நல்லாட்சிக்குப் பதிலாக தமது நலன் சார்ந்த அட்சியொன்றை இலங்கையில் கட்டவிழ்த்து விட்டனர். தன் கண்ணில் உள்ள துரும்பைப் பாராது மற்றவன் கண்ணில் உள்ள துரும்பை தேடத் தொடங்கினர். இதன் விளைவாக ஜனநாயக விரோத மனப்பாங்குகள் அரசியலில் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாக அரசியல் அமைப்பின் பிரகாரம் நாட்டின் நலன் கருதியே தம்மால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை அரசின் ஆட்சி தலைமைத்துவம் கூறினாலும் இதற்குத் தீர்வுகாணவேண்டிய முழுப் பொறுப்பும் இலங்கை பாராளுமன்றத்துக்கே உண்டு. பிரநிதித்துவ ஜனநாயகப் பாதையில் பயணிக்கும் இலங்கை அரசு ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காது, பாராளுமன்றத்தை உடன் கூட்டி நாட்டு நலன் கருதி அரசியல் இயந்திரத்தை இயக்காது, பாராளுமன்ற கூட்டத்தொடரை பிற்போடுவது அல்லது பாராளுமன்றத்தைக் கலைக்க முற்படுவது ஜனநாயகத்துக்கு விரோதமான பிற்போக்குத் தனமான அரசியல் நாகரிகமற்ற செயற்பாடு என உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கட்சித்தாவல்களும், பேரம் பேசுதல்களும், துரோகத்தனங்களும், தந்துரோபாயங்களும், சூழ்ச்சிகளும் மலிந்துவிட்ட இலங்கை அரசியலில் ஜனநாயகம் வளருமா என்பதல்ல, துளிர்க்குமா என்பதில் கூட சந்தேகமே நிலவுகிறது. ஆட்சியில் அரியாசனம் அமர்ந்த ஆட்சியாளர்கள் தாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதை நன்கு உணரவேண்டும். மக்களுக்காக மக்களால் மக்கள் தெரிவு செய்யும் ஆட்சியே ஜனநாயகம் என்ற சிந்தனை அரசியல் தலைவர்களின் ஆழ் மனங்களில் வேரூன்றவேண்டும்.


தமிழிலில் வழங்கும் ஒரு பழமொழி போல "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?" என த்ழிழர்களாகிய நாம் தென்னிலங்கை அரசியல் கொந்தளிப்பை கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்க முடியாது. கட்சித்தாவலுக்கும், பேரம் பேசுதலுக்கும் அடிமையாகி விட முடியாது. தென்னிலங்கை அரசியல் தமிழர்களிலும் ஏனைய சிறுபான்மை கட்சிகளிலும் தான் தங்கியுள்ளது என்பது கடந்த கால வரலாறுகள் ஆணித்தரமாக அறைந்து விட்டுச் சென்ற செய்தியாகும். இலங்கை ஆட்சியாளர்களை தீர்மானிக்கும் சக்தி தமிழர்கள் தான் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. ஆனால் எந்த ஒரு ஆட்சியாளரும் தமிழர்களுக்கான உரிமைகளைப்பெற்றுத் தருவதற்கு தயாராக இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். நாம் எவரை ஆதரித்தாலும் நமக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. எனினும் தமிழர்களாகிய நாம் இலங்கைத் தீவில் எமது இருப்பை நிலைநிறுத்த உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் முனைப்புடன் செயற்பட்டே ஆகவேண்டும்.

தமிழ்க் கட்சிகள் யாரை ஆதரிக்கப்போகின்றார்கள் என்பதற்கு அப்பால் நாம் ஆதரிக்கப் போகின்றவர்களால் எமக்கு விமோசனம் கிடைக்குமா என்பதை சிந்தித்துப் பார்த்து செயற்பட வேண்டிய தருணமிது. அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள், அரசியல் கைதிகள் விவகாரம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், மீள்குடியேற்றம், நில அபகரிப்புக்கள், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் எனப் பலவேறு பிரச்சினைகளுக்கு தமிழ்ச் சமூகம் விடைகாண வேண்டிய நிலையிலுள்ளது. இவையெல்லாம் தொடர்ந்தும் வினாக்களாவே எம்முன் இருக்கப் போகும் அரசியல் பிரவேசம் தமிழர்களுக்கு இனியும் வேண்டாம். நல்லதொரு தீர்வை நோக்கி தமிழ்ச்சமூகத்தை நகர்த்தக்கூடியவர்களின் பக்கம் தமிழ்த தலைமைகள் தலைசாய்க்கா விட்டால் தமிழர்களின் தலைகள் மீண்டும் பந்தாடப்படுவதை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் பெரும்பான்மை கட்சிகள் இரண்டும் தமக்குள் போட்டியிட்டுக்கொண்டிருக்கும் நிலையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தமிழ்க் கட்சிகளை அரவணைப்பதும், கைவிடுவதுமாயின் பன்னாட்டு சமூகமே எமக்கு கைகொடுக்க வேண்டும்.

தென்னிலங்கை அரசியல் தலைவர்களும், மக்களும், மத பீடங்களும் தமிழினத்தை இலங்கைத் தீவின் இணை உரிமையாளர்களாகவும் இணைப் பங்காளர்களாகவும் ஏற்றுக்கொள்ளும் மனநிலை உருவாகாத நிலையில் நல்லெண்ணம், நல்லிணக்கம், சுயாட்சி, சமாதானத் தீர்வு, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பன எல்லாம் கானல்நீராகப் போய்விடும் என்பதே தென்னிலங்கை அரசியல் நமக்கு கற்றுத்தரும் பாடமாகும். தமிழ்க் கட்சிகளையும், சிறுபான்மைக் கட்சிகளையும் கையில் எடுத்து ஆட்சி அரியாசனம் அமரும் ஆட்சியாளர்களின் கைகளில் நாம் பகடைக்காய்களாக உருண்டோடாமல் காத்திரமான தீர்வு நோக்கி முன்நகர்வோம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# நம்மிடையே விளங்கவேண்டிய ஒருமைப்பாட்டிற்கு எதிரிகளாக இருப்பன வீண் பெருமையும், கட்சி மனப்பான்மையும்



நாம் ஒவ்வொருவரும், நம் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் வாழ்வின் இலக்குகளைத் தீர்மானிப்பதை விடுத்து, நம் பார்வையை விரிவாக்கவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது மறையுரையின் மூலம் கேட்டுக் கொண்டார்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில், நவம்பர் 5 ஆம் திகதி நிறைவேற்றிய திருப்பலியில், யாரை விருந்துக்கு அழைப்பது என்று லூக்கா நற்செய்தியில் கூறப்பட்டுள்ள பகுதியையும், வீண்பெருமை கொள்ளவேண்டாம் என்று திருத்தூதர் பவுல் கூறிய சொற்களையும் மையப் படுத்தி திருத்தந்தை மறையுரை வழங்கினார்.

நம்மிடையே விளங்க வேண்டிய ஒருமைப்பாட்டிற்கு பெரும் எதிரிகளாக இருப்பன, வீண் பெருமையும், கட்சி மனப்பான்மையும் என்பதைச் சுட்டிக் காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுயநலத்தால் சிறைப்பட்டுள்ள உள்ளங்களில் இவ்விரு தீமைகளும் வளரும் என்று குறிப்பிட்டார்.

வாழ்வில் நாம் பெற்றுள்ள அனைத்தும் இறைவனிடமிருந்து வரும் கொடைகளே என்பதை நாம் உணரும் வேளையில் கட்சி மனப்பான்மையும், வீண் பெருமையும் நம்மை விட்டு மறைந்து, நம் வாழ்வில் அனைவரையும் உள்ளடக்கும் பரந்து விரிந்த கண்ணோட்டம் உருவாகும் என்று திருத்தந்தை தன் மறையுரையில் மேலும் எடுத்துரைத்தார்.

# திருவிவிலியத்தில் திருப்பாடல்கள்

திருவிவிலியத்தில் 'திருப்பாடல்கள்' பக்திப் பாடல்கள், இறை மன்றாட்டுக்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு கவிஞர்களால் இயற்றப்பட்ட இப்பாடல்களை இஸ்ரா-யேல் மக்கள் தங்கள் வழிபாடுகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். காலப்போக்கில் இவற்றின் தொகுப்பு அவர்களது திருமறை நூலின் முக்கிய பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத் திருப்பாடல்களைப் பல வகையாகப் பிரிக்கலாம். அவை:

1. கடவுளைப் புகழ்ந்து வழிபடுவதற்கானவை.
2. கடவுளிடம் உதவி, பாதுகாப்பு, மீட்பு வேண்டிப் பாடியவை.
3. மன்னிப்பு வேண்டும் மன்றாட்டு.
4. கடவுள் வழங்கிய ஆசிகளுக்கு நன்றி செலுத்தும் பாடல்கள்.
5. அரசர் பற்றிய பாடல்கள்.
6. அறிவுரை அளிக்கும் பாடல்கள்.

இவை தனி மனித வேண்டுதலாகவோ, நாட்டு மக்களின் மன்றாட்டமாகவோ அமைந்துள்ளன. இவற்றுள் பல தனிப்பட்ட இறையடியாரின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றன. ஏனையவை இஸ்ராயேல் இனத்தின் நாட்டங்களையும் உணர்வுகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. கிறிஸ்து இயேசுவின் திருவிழாவிலும் திருப்பணியிலும் திருப்பாடல்கள் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. புதிய ஏற்பாட்டிலும் இப்பாடல்கள் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே இப்பாடல்கள் கிறிஸ்தவத் திருமறையிலும் திரு அவையின் இறை வழிபாட்டிலும் தொடக்கத்திலிருந்தே சிறப்பிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திருப்பலியில் திருப்பாடல்**

திருப்பலி வேளையில் இறைவார்த்தை வழிபாட்டு நேரம் திருப்பாடலை அல்லது பதில் பாடலை வாசித்து அல்லது பாடித் தியானிப்பது திரு வழிபாட்டு ஒழுங்கு முறையாகும். திருப்பாடல்கள் திருவிவிலியத்தில் ஏனைய நூல்களைப் போன்று ஒரு நூல். ஆதலால் திருப்பாடல் அல்லது பதில்பாடல் இறை வார்த்தையே. எனவே இறைவார்த்தைக்கு (திருப்பாடல் / பதில்பாடல்) சமமாவோ அல்லது மாற்றீடாகவோ திருப்பலி வேளையில் வேறு பாடல்களை தியானப் பாடலாக பாடுவது பொருத்தமற்றதும் வழிபாட்டுக்கு முரணானதும் ஆகும்.

நீண்ட காலமாக எமது மறைமாவட்டத்தில் பல ஆலயங்களில், சிற்றாலயங்களில், யாத்திரை திருத்தலங்களில், துறவுமடங்களில் திருப்பாடலுக்குப் பதிலாக தியானப் பாடல்கள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், யாழ் மறை மாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டின் பின்னர் ஓரளவு மாற்றங்களும் இவ்விடயத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இருப்பினும் இன்னும் பல ஆலயங்களில் திருப்பலி வேளையில் தியானப் பாடலையே பயன்படுத்தி வருவது மிகவும் வேதனைக்குரியது.

"திருப்பாடல் அல்லது பதில் பாடல் இறை வார்த்தை வழிபாட்டின் முழுமையான பகுதியாகும். இது இறைவார்த்தையை தியானிக்க உதவுவதால் இது திருவழிபாட்டின் அருள்பணியிலும் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது. பதிலுரைப் பாடலைப் பாடுவது மிக நன்று. அதில் மக்களின் பதிலு-ரையாவது பாடப்பட வேண்டும்" (உ.தி.பொ.61)

"முதலாவது வாசகத்தை தொடர்ந்து வரும் பதிலுரைப் பாடலுக்குப் பதிலாக திருப்பாடல் அல்லாத வேறு பாடல்களைப் பாடுவது தவிர்க்கப்பட வேண்டும். (திருவழிபாட்டு கைநூல் இல.32)

எனவே அனைத்து ஆலயங்கள், சிற்றாலயங்கள், யாத்திரைத் திருத்தலங்கள், துறவு மடங்களில் இறைவார்த்தை வழிபாட்டின் திருப் பாடல் அல்லது பதில் பாடலை கட்டாயமாகப் பயன்படுத்துவதை நடைமுறைக்கு கொண்டு வரவும். எந்தவொரு திருப்பலி கொண்டாட்டத்திற்கும் இது பொருந்தும்.சாதாரண நாள் திருப்பலிகள், ஞாயிறு திருப்பலிகள், பெருவிழாக்கள், விழாக்கள், ஆலய நவநாட்கள், திருவிழாக்கள், திருமணத் திருப்பலி, அடக்கச் சடங்கு திருப்பலி, குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி, துறவற வார்த்தைப் பாட்டுத் திருப்பலிகள் அனைத்திலும் திருப்பாடலை அல்லது பதில் பாடலை பயன்படுத்துவது உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் படிப்பினைக்கு ஏற்ப எமது மறைமாவட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதனை நினைவூட்டுகின்றோம்.


அனைத்து பங்குத் தந்தையர்கள், அருட் பணியாளர்கள், துறவு மடத் தலைவர்கள், வழிபாட்டுக் குழுவினர், பாடகர் குழாமினர் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து திருவழிபாட்டின் பொருளுணர்த்தும் வழிபாடுகளை நிகழ்த்த முன்வரவேண்டும்.

**அருட்பணி X.W. ஜேம்ஸ்**
**இயக்குநர்.**
**திருவழிபாட்டு ஆணையம்.**
**யாழ்ப்பாணம்.**



குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய பங்கைச் சேர்ந்த 110 மாணவர்களுக்கு யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் 29.10.2018 அன்று வழங்கிவைக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி சசிதரன் அடிகளார் தலைமையில் அருட்சகோதரிகள் மற்றும் மறையாசிரியர்கள் வகுப்புக்களை நடத்தி மாணவர்களைப் பயிற்றுவித்தனர்.

# யாழ் புனித மடுத்தினார் குருமடத்தின் 1869 - 2019 150 வது யூபிலி ஆண்டு ஆரம்பம்



## 11.11.2018 - 11.11.2019

### இலங்கையின் முதல் குருமடம் யாழ் புனித மாட்டீனார் குருமடம்

**“ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்”** (லூக் 1:49)

இலங்கையின் முதல் குருமடம் என்ற பெருமையுடன் யாழ் மறைமாவட்டத்தின் இதயமாக விளங்கும் புனித மடுத்தினார் குருமடம் ஆண்டவரின் ஆசீர்வாதங்களினால் கடந்த 149 ஆண்டுகளாக யாழ், மன்னார் மறை மாவட்டங்களுக்கும் உலக திருச்சபைக்கும் பல ஆயர்களையும் பல நூற்றுக்கணக்கான குருக்களையும் உருவாக்கி, தனது நூற்றி ஐம்பதாவது யூபிலி ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

கடந்த 149 ஆண்டுகளாக இக் குருமடுத்தினூடாக யாழ் மற்றும் மன்னார் மறை மாவட்டங்களிலும் இன்னும் உலகின் பல்வேறு இடங்களிலும் பணியாற்ற தேவையான பல ஆயர்களையும் பல நூற்றுக்கணக்கான குருக்களையும் உருவாக்கி திருச்சபையைப் பேணிக்காத்து அருள்பாலிக்கும் ஆண்டவருக்கு நன்றி கூறி புகழ் பாடுவோம். ஏனெனில் வல்லவராம் கடவுள் இக் குருமடத்தினூடாக உலக திருச்சபைக்கும் எமது மறைமாவட்டத்துக்கும் அரும்பெரும்செயல்கள் பல செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்.

11 நவம்பர் 2018, குருமடத்தின் பாதுகாவலராம் புனித மடுத்தினாரின் பெருவிழா அன்று யாழ் ஆயர் அதிவந்தனைக்குரிய ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் யாழ் புனித மடுத்தினாரு் குருமடத்தின் 150 ஆவது யூபிலியை பிரகடனம் செய்து யூபிலி நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பார்.

இன்றைய யாழ் மறைமாவட்டம் 1850 ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க நிர்வாகப் பிரிவாக இருந்த போது முதல் அப்போஸ்தலிக்க ஆளுநராக இருந்த இத்தாலி ஒறற்ரோறின் சபையைச் சேர்ந்த ஆயர் ஓராசியோ பெற்றக்கினி ஆண்டகை (1846-1857) சுதேச குருக்களை உருவாக்க குருமடம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவை முதலில் கொண்டிருந்தார் என அறிய வருகிறது. இவ் எண்ணக்கருவை மூன்றாவது அப்போஸ்தலிக்க ஆளுநராக நிர்வாகம் செய்த கிறிஸ்ரோபர் பொன்ஜின் அ.ம.தி (1868-1883) ஆண்டகை 1869 ஆம் ஆண்டு நனவாக்கினார்.

**அருட்பணி ச. யோ. க. பாஸ்கரன்**
**அதிபர்**
**புனித மடுத்தினார் குருமடம்**
**யாழ்ப்பாணம்**

“அறுவடை மிகுதி வேலையாட்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும் படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.” மத் 9: 37-38

யாழ் மறைமாவட்டத்தின் குருத்துவ உருவாக்கலில் மிக முக்கிய இடம் வகிக்கும் புனித மடுத்தினார் சிறிய குரு மடம், தொடர்ந்தும் தன் பணிகளை காலத்திற்கு ஏற்ற விதமாக வழங்கி தன் முழுமையான பங்களிப்பை செய்ய இறைவரம் வேண்டுவோம். இங்கு பயிற்சி பெற்று இன்று குருக்களாக ஆயர்களாக யாழ் மன்னார் மறைமாவட்டங்களிலும் ஏனைய இடங்களிலும் பணியாற்றுபவர்களையும் இன்னும் பணியாற்றி இளைப்பாறிய ஆயர்களையும் குருக்களையும் பாராட்டி வாழ்த்துவோம், அவர்கள் வாழ்வுக்காகவும் பணிக்காகவும் இறைவரம் வேண்டுவோம். பயிச்சி எடுத்துக் கொண்டிருக்கும் குரு மாணவர்களுக்காகவும் அருட்சகோதரர்களுக்காக இறைவனிடம் மன்றாடுவோம்.

இங்கு பயிற்சி பெற்று ஆயர்களாக குருக்களாக பணியாற்றி இறைபதம் அடைந்த ஒவ்வொருவரின் ஆன்மாவும் இறைவனில் அமைதி பெற மன்றாடுவோம்.

குருக்களாக, பெற்றோர்களாக, மறையாசிரியர்களாக, அருட்பணிசபையினராக மற்றும் இளைஞர் மன்றத்தினராக உள்ள நாங்கள் கடந்த 150 ஆண்டுகளாக புனித மடுத்தினார் குருமடத்தினூடாக ஆயர்களை, குருக்களை எமக்குத் தந்த ஆண்டவருக்கு நன்றி கூறி அவர் புகழ் பாடி தொடர்ந்தும் இக் குருமடதினூடாக இறையழைத்தல்களை ஆண்டவர் பெருகச் செய்து எமது மறைமாவட்டத்தையும் திருச்சபையையும் ஆசீர்வதிக்க மன்றாடுவோம். இறையழைத்தல்களை ஊக்குவிக்க உறுதி எடுப்போம்.

ஆண்டவரே இறை அழைத்தல்கள் ஓரளவு குறைந்துவரும் நிலையில் அறுடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி உம்மை மன்றாடுகின்றோம்.

---

# மனிதநேயத்தில் சங்கமிக்கும் மன்னிப்பு

**அருட்பணி ஜே.திருச்செல்வம் (அமதி )**

தவறுகள், அக்கிரமங்கள் அன்றும் இன்றும் மலிந்தே கிடக்கின்றன. உள்ளங்களிலே தாக்கப்பட்ட உணர்வுகள் நினைவுகள்.

நெஞ்சிலே அவைகள் முட்களைப் போல் தைத்த வண்ணம் இருக்கின்றன. உள்ளத்தை நொறுக்கும் சொற்கள், நெஞ்சைப் பிளக்கும் அநீதிகள் வாழ்வைக் குட்டிச் சுவராக்கி அழித்தொழிக்க செய்த சதிகள் இன்னும் பல. மன்னிக்கவோ மறக்க முடியாதவையாக அவை மனத்தை அழுத்துகின்றனவே! நினைத்துப் பார்க்கையில் உள்ளம் வெதும்புகின்றதே!. மனிதம் மறைந்துவிட்டதா?

மனச்சாட்ச்சியின் குரல் செத்து விட் டாதா? இப்படியான சிந்தனைகள் பல உள்ளங்களை வாட்டி வதைக்கின்றன. இச்சந்தர்ப்பங்களில் பழிக்குப் பழிவாங்குவது மனித உள்ளத்தில் எழுகின்ற இயல்பான உணர்வே. ஆனால் பழிக்குப் பழி வாங்கும் ஆவேஷமான உணர்வுகள் மட்டுமீறி எல்லை கடந்து செல்வதுமுண்டு. தனிமனித உயிரை மட்டுமல்ல குடும்பங்கள் சமூகங்களையே குட்டிச் சுவராக்கிய வரலாறு ஒன்றை பழைய ஏற்பாட்டில் காணலாம். இது தீனாவுக்கு ஏற்பட்ட அவமானம் என்ற தலைப்பில் தொடக்கநூலில் விபரிக்கப்பட்டுள்ளது. இந்த தீனா என்பவள் யார்? லேயா என்ற யாக்கோப்பின் மனைவி பெற்றெடுத்த மகள். தீனா ஒருமுறை கானானியர் என்ற புற இனத்தார் வாழும் அயல் நகருக்குச் சென்றாள். அப்பொழுது நகரின் தலைவனான ஆமோரின் மகன் ஷெக்கெமால் உருவாக்கப்பட்டு வல்லலுறவுக்கு உட்படுத்தினான். ஆனாலும் குற்றத்தை உணர்ந்தவனாய் பரிகாரம் செய்யவும் அவளைத் திருமணம் செய்யவும் முன் வந்தான். ஆனால் இச்செய்தி யைக் கேள்விப்பட்டு ஆவேஷமடைந்த யாக்கோப்பின் புதல்வர் சிலர் என்ன செய்தனர்? பழிக்குப் பழிவாங்கி ஏற்பட்ட அவமானத்தை ஈடுசெய்ய சதித்திட்டம் தீட்டினர். “அவர்கள் வாழ்

எடுத்துக்கொண்டு சந்தேகம் எழாதபடி நகருக்குள் புகுந்து அவர்களை (ஆண்கள் அனைவரையும்) வெட்டி வீழ்த்தினர். அவர்கள் ஆமோரையும் அவன் மகன் ஷெக்கெமையும் வெட்டி வீழ்த்தியபின் தீனாவை ஷெக்கெம் வீட்டில் நின்று அழைத் துக் கொண்டு போய்விட்டார்கள்.” தொடக்க நூல் 34..25.26. அத்தோடு நின்று விடவில்லை. பின்னர் வந்து நகரிலுள்ள எல்லாச் செல்வங்களையும் சூறையாடியதோடு குழந்தைகள் பெண்களையும் கைதிகளாக்கி தங்கள் ஊருக்குச் கொண்டு சென்றனர்.

தங்கள் சகோதரி தீனாவுக்கு ஏறப்பட்ட பாதிப்புக்கு வஞ்சம் தீர்க்க இவ்வளவு கொலைகள், கொள்ளை கள் கைதிகள் ஆக்கப்படுதலா? இவ்வளவு அராஜகம், அட்டூழியங்கள். காழ்ப் புணர்ச்சியின் கட்டுக்கடங்காக் கோலங்ள். இப்பேற்பட்ட பின்புலத்தில் மனித உயிரை மதிப்பை மகத்துவத்தை பேணிக் காக்கக் கூடிய சட்டங்கள் தேவைப்பட்டன. அதனாலன்றோ இறைவன் பாலைவனத்துப் பயணத்தின் போது மோயீசனுக்கு சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். ஆனால் அவைகள் செயலுருவம் பெறவில்லை. பின்னர் வாக்குப் பண்ணப்பட்ட பலஸ்தீன நாட்டில் லேவியர் இணைச்சட்ட நூல்களில் மேலதிக நீதிநெறிகள் நியமங்கள் வகுக்கப்பட்டு வரம்புகள் எல்லைகள் மீறிய செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டன. “கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல். இது போன்றே காயம் விளைவித்தவருக்கும் செய்யப்படவேண்டும். விலங்கைக் கொன்றால் பதிலாகக அதை கொடுக்கவேண்டும். மனிதரைக் கொன்றால் பதிலாக (அதே எண்ணிக்கையினர்) கொலை செய்யப் பட வேண்டும்” லேவியர் 24.20 21. ஒரு கொலைக்கு ஒரு கொலை மட்டுமே. பல கொலைகள் அல்ல. பழைய காலத்து சமூகவியல் கட்டமைப்புக்களின் பரிணாம வளர்ச்சியில் மிதமிஞ்சிய வன்செயல்களைக் கட்டுப் படுத்த பதிலடி பழிவாங்கல் அனுமதிக்க வேண்டிய தாயிற்று. இந்தச் சட்டம் அன்றைய காலத்தின் ஒழுக்கவியலில் முன்னேற்றத்தின் ஒரு முக்கிய படியாகவே கருதப்பட்டது.

ஏறக்குறைய கிறிஸ்துவுக்கு முன் 14ம் நூற்றாண்டு காலப் பகுதியில் சீனாய் மலையில் மோயீசன் கொடுத்த பத்துக் கட்டளைகளுக்குப் பின்னர் உருவான நீதி நியமங்கள் புரட்சிகர மாற்றங்களைச் சந்திக்கக் காத்திருந்தன. கிறிஸ்துவின் வருகை அவர் போதனைகள் புதிய சிந்தனைகளை உறவுப் பரிமாற்றங்களைப் பிரசவித்தன. இறையாட்சிக்கு வழிவகுத்தன.

வழிபாட்டுச் சடங்குகள் ஒழுக்கவியல் சமூகவியல் அனைத்தையும் அடிப்படை மாற்றங்களுக்கு உட்படுத்தி ஒரு புதிய யுகத்தை தோற்றுவித்தன. கிறிஸ்துவின் மலைப் பொழிவைத் தொடர்ந்து வெடித்துச் சிதறிய அவர் சிந்தனைப் பொறிகள் பலஸ்தீன நாட்டில் மட்டுமல்ல அன்றைய அயல் உலகிலேயே ஒரு புரட்சிகர மாற்றத்துக்கு அறைகூவல் விடுத்தன. “கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல என்று கூறப்பட்டிருக்கிறதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக உங்கள் வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்”.மத்தேயு 5: 38. இவை சவால் விடுக்கும் போதனைகள். கேட்போருக்கு அதிர்ச்சியும் கூட. இதைத் தொடர்ந்து விரிவாக்கம் பெற்ற அவர் போதனைகள் மட்டுப்படுத்தப்பட்ட பழிவாங்கல் என்ற சொல்லுக்கும் சிந்தனைக்கும் முற்றுப் புள்ளி வைத்தன. இரக்கத்திலிருந்து ஊற்றெடுக்கும் மன்னிப்பு என்ற புதிய பரிணாமத்துக்கே வித்திட்டது. தண்டனை நீதியையும் கடந்து பிறர்நலம் பேணும் தன்நலமற்ற அன்பை அடித்தளமாகக் கொண்ட ஒரு புதிய உலகக் கலாச்சாரத்துக்கு அடிகோலியது.

“உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்” மத்.18:35. ஆகவே இன்று நாம் எந்த அளவிற்கு இந்தப் போதனைளை உள்வாங்கி இருக்கிறோம்? பழங்காலத்துப் பழிவாங்கல் கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாக இன்றும் காட்சி அளிக்கிறோமா? அல்லது புதிய உடன்படிக் கையில் கிறிஸ்துவின் மன்னிப்பின் வள் ளல்களாக சாட்சிகளாக செயற்பட கற்றுக்கொள்கிறோமா? எதிரியை நீதித் தீர்ப்பின் படி தண்டித்து இன்புறுவதில் அல்ல அவனின் நல்வாழ்வையை முனைப்பாக் கொண்டு செயற்பட வழிகாட்டுவதே கிறிஸ்துவின் புதிய போதனை. தவறிழைப்பது மனித இயல்பு மன்னிப்பதோ தெய்வீக இயல்பு. கிறிஸ்துவின் போதனைகளை முழுமனத்துடன் உள்வாங்கி நம்மை முழுவதும் மாற்றி அமைப்பது எவ்வளவு கடினம்! புழிக்குப் பழிவாங்கும் கலாசாரம் நம் சமுதாயத்தை குட்டிச்சுவராக்கும் இவ்வேளையில் மனித நேயத்தில் சங்கமிக்கும் மன்னிப்பை அடித்தளமாகக் கொண்டு முதலில் என்னையும் தொடர்ந்து எம் குடும்பங்களையும் சமுதாயத்தையும் உருவாக்குவது காலம் விடுக்கும் சவாலன்றோ!

# முல்லை மறைக்கோட்டத்தில் "பொதுநிலையினர் எழுச்சி நாள்"



## முகவுரை

"எங்கு பொதுநிலையினர் திருத்தூதுப் பணி ஆற்றவில்லையோ அங்கு திருமறை வளரவில்லை வேரூன்றவில்லை" என்று சொல்லுவார்கள் திருச்சபையின் வளர்ச்சியிலும் உறுதித்தன்மையிலும் இறையாட்சியை ஏற்படுத்துவதிலும் பொதுநிலையினரின் வகிபாகம் காத்திரமானது. திருமறையில் 99% வீதமாக இருக்கும் பொதுநிலையினர் தமக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தளங்களிலும் திருநிலையினரோடு இணைந்து இறைமகன் இயேசுவின் திருத்தூதுப் பணிகளை ஆற்ற வேண்டும் என்பதே திருமறையின் அழைப் பாகும். இச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கோடு கடந்த 28.10.2018 ஞாயிறு அன்று முல்லைத்தீவு மறைக் கோட்டத்தில் யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழகமும் முல்லைத்தீவு மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகமும் இணைந்து முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் மறைமாவட்டக் கழகம் மற்றும் முல்லை மறைக்கோட்டக் கழகத்தின் தலைவ ரான திருவாளர் றோமியல் அவர்களின் தலைமையில் பொதுநிலையினர் எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டது. மறை மாவட்ட இயக்குநர் அருட்பணி யோ.யோ.மவுலிஸ் அடிகளாரின் தலை மையில் கழக உறுப்பினர்களும் முல்லை மறைக்கோட்ட 09 பங்குகளிலி ருந்து அழைக்கப்பட்ட பிரதிநிதிகளும் முல்லை மறைக்கோட்ட இயக்குநர் அருட்பணி எஸ்.விமலசேகரன் (வசந்தன்) அடிகளாரும், பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி A.J.யாவிஸ் அடிகளாரும், முல்லை மறைக்கோட்ட முதல்வர் S.A.ஜோர்ஜ் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

## ஆரம்ப செபமும் உரைகளும்

முல்லை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக உறுப்பினர்க ளால் ஆரம்ப செப வழிபாடுமுன் னெடுக்கப்பட்டது. பொது நிலையினரை உற்சாகப்படுத்தும் இறைவார்த்தைப் பகுதி வாசித்துத் தியானிக்கப்பட்டது. தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன. "முல்லைத்தீவு இன்று அனைவராலும் உற்றுப்பார்க்கப்படுகின்ற பேசப்படுகின்ற இடமாக மாறியுள்ளது. மறை மாவட்ட எல்லைப்பகுதி இப்பகுதியில் இருப்ப தோடு மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழருக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் நாம் விழிப்போடு இருந்து இதைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறியதோடு, நாம் உலகிற்கு உப்பாக ஒளியாக வாழ முன் வரவேண்டும் என்று அருட்பணி S.விமலசேகரன் அடிகளார் குறிப்பிட்டார்.

"பொதுநிலையினரை உற்சாகப் படுத்தவேண்டும் ஊக்கப்படுத்த வேண் டும் என்ற நோக்கோடும் முல்லை மறைக்கோட்டத்தில் பொதுநிலை யினரின் பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்ற முனைப்போடும் பொது நிலையினரின் எழுச்சியே திருமறையின் வளர்ச்சி என் பதை உணர்ந்து தங்களுக்கு இறைவ- னால் வழங்கப்பட்ட குடும்பம், சமூகம், திருமறை என்ற தளங்களில் திருத்தூதுப் பணியாற்றி சான்று பகர முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார் அருட்பணி யோ.யோ. மவுலிஸ் அடிகள். முல்லை மறைக்கோட்ட முதல்வர் S.A.ஜோர்ஜ் அடிளார் உரையாற்றுகையில் முல்லை மறைக்கோட்டம் மிக அண்மையில்

**இ.அ.அமலரட்ணம்**

ஆரம்பிக்கப்பட்டபடியால் உடடியாக எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்து வது கடினமாக இருந்தபோதும் மறை மாவட்ட பொதுநிலையினர் கழகம் வழங்கும் உற்சாகமும் பிரசன்னமும் எமக்கு மகிழ்வைத் தருவதோடு நாமும் ஊக்கப்படுத்தப்படுகின்றோம் என்று தெரிவித்ததோடு, எதிர்காலத்தில் முல்லை மறைக்கோட்டம் நிச்சயமாக குன்றின்மேல் தீபமாக ஒளிவீசும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் A.J.யாவிஸ் அடிகள் உரை வழங்குகையில் மறை மாவட்டத்தின் முக்கிய அமைப்பாக இருக்கின்ற பொதுநிலையினர் கழகம் எல்லா இடங்களிலும் எல்லா நிலைகளிலும் பங்காற்றவேண்டும் என்றும் கு றிப்பாக சமூக அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு துன்பத்தில் ஆறுதலாகவும், தேவையில் உடனிருந்து உதவுகின்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

## சிறப்புக் கருத்துரை

மேற்படி நிகழ்வில் சிறப்புக் கருத்துரை ஒன்று ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது. இக்கருத்தமர்வை அருட்பணி S.வசந்தசேகரன் அடிகளார் நெறிப்படுத்தினார். இறைமகன் இயேசு சமூக அநீதிக்கு எதிராகக் குரல்கொடுத்த படியால் தான் 33 வயதில் கொலை செய்யப்பட்டார். அவர் சமூக அநீதியை கண்டும் காணாமலும் இருந்திருந்தால் நீண்ட வருடங்கள் வாழ்ந்திருக்க முடி யும் என்று கூறியதோடு, மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை அமைப்பைச் சேர்ந்த முல்லைத்தீவு மாவட்ட காணி உத்தியோகத்தர் திருவாளர் சரவணன் அவர்களையும், அவரோடு வருகை தந்திருந்த கிராமசேவையாளரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

வடக்கு மாகாண மகாவலி "L" வலயம் என்ற போர்வையில் தமிழருக்கு எதிரான பாதகமான வஞ்சக செயற்பாடுகள் அரங்கேற்றப்படுகின்றது என்றும் அதனால் எமது மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை அமைப்பு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் கூறியதோடு, இந்த "L" வலயத்தில் மக்கள் குடியமர்த் தப்படும்போது அதிகளவான பெரும் பான்மையினக் குடும்பங்கள் குடியமர வாய்ப்புள்ளதால் எமது மண் பறிபோவது மட்டுமல்ல, சிங்கள ஆதிக்கம் அதிகரிக் கப்படுவதோடு அரசியல் பிரதிநிதித் துவம் மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்று தெரிவித்தார். அத்துடன் இன்று எமது இனம் பல்வேறு விதமான ஆபத்துக்களைச் சந்திக்கின்றது. வன்முறைக் கலாசாரம், போதை வஸ்துப் பாவனை, வரலாறுகள் மூடிமறைக்கப்படுவதும் திரிபுபடுத்தப்படு வதும் தொல்லியல் சான்றுகளை அழித்தல், நில ஆக்கிரமிப்பு மற்றும்



இனப் பரம்பலை மாற்றுதல் போன்ற சவால்களுக்கு எமது இனம் முகம் கொடுக்கின்றது. கடந்த காலங்களில் எமக்கு வழிகாட்டல்கள் இல்லாமல் இருந்தது என்றும் தற்பொழுது அருட்பணியாளர்கள் பக்கபலமாக இருப்பதால் நாம் துணிவோடு செயற் படுகின்றோம். எனவே பொது நிலை அமைப்புக்களும் ஆர்வம் உள்ளவர்களும் எமது மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை அமைப்போடு இணைந்து எதிர்ப்பைக் காட்ட முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார். வடக்கு மாகாண மகாவலி அபிவிருத்தி "L" வலயத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புப் பற்றித் தெரியாமல் இருந்த பலருக்கு இக்கருத்தமர்வு ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுத்துள் ளது என்றால் அது மிகையாகாது.

## கழக கூட்டங்களும் மரம் நடுகையும்

யாழ் மறைமாவட்ட பொது- நிலையினர் கழகக் கூட்டமும் முல்லை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகக் கூட்டமும் இடம்பெற்றன. அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு மறைக்கோட்டக் கழகங்களும் கடந்த மாதம் முன்னெடுத்த செயற்பாடுகள் பற்றி எடுத்துக்கூறினர். மறைமாவட்டக் கழக இயக்குநர் அருட்பணி யோ.யோ.மவுலிஸ் அடிகளார் எதிர்காலத்தில் மறைமாவட்டக் கழக செயற்பாடுகளுக்கு மறைக் கோட்டக் கழகங்கள் முழு ஆதரவை யும் வழங்கவேண்டும் என்றும் குறிப் பாக அடுத்த வருடம் தவக்காலத்தில் நடத்தப்படவிருக்கும் போட்டிகளுக்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளு மாறும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து புனித பேதுருவானவர் ஆலய வளாகத்தில் மரம் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. மரங்கள் மழை வீழ்ச்சியை அதிகரிக்கும். புவி வெப்பமடைவதைத் தடுக்கும் என்ற நோக்கோடு சமூக நலனில் அக்கறை கொண்டதாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. அருட்பணியாளர் களும், மறைக்கோட்டக் கழகத் தலைவர் களும் மரங்களை நாட்டி வைத்தனர்.

## உண்ணாவிரதம் இருப்போரைச் சந்தித்தமை

நிகழ்வுகள் அனைத்தும் நிறை வடைந்த பின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தரவேண்டும் என்று 600 நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்து போராடி வருகின்ற குடும்ப உறவினர்களை அருட்பணியாளர்க ளோடு இணைந்து கழக உறுப்பினர்கள் சந்தித்து உரையாடி ஆறுதல் கூறினர். ஒவ்வொருவரும் தங்களின் மனக் குமுறல்களை கண்ணீரோடு வெளிப்படுத்தினர். தங்களுடைய பிள்ளைகள் தங்களுக்கு கிடைக்க உதவுமாறும், செபிக்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

அருட்பணியாளர்களும், கழக உறுப்பினர்களும் ஆறுதல் கூறி அவர்க ளுக்காக செபித்து விடைபெற்றனர்.

## நிறைவாக

மறைமாவட்டக் கழகம் மறைக் கோட்டக் கழகங்களைச் சந்தித்து உறவுகளை ஆழப்படுத்துவதோடு அவர்கள் தமது பொதுநிலையினர் சீடத்துவப் பணிகளை உணர்ந்து கொள்ளவும், சிறப்பாகப் பணிபுர- ியவும் வழிகாட்டுவது ஒரு சிறப்பான செயற்பாடாகும். இச் சந்திப்பும் எழுச்சி நிகழ்வுகளும் பல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வழிகோலியுள்ளது. எனவே நாம் ஒவ்வொருவரும் பணிப்பொறுப்புக்களில் சிறப்பாக செயற்படுவதோடு, மற்றவர்க ளையும் பணி செய்யத் தூண்டும் கருவி களாக வாழுவோம்.

# காவலன் கலசம்



# ஞாயிறு திருப்பலியில் என்ன செய்ய வேண்டும்?

"நானோ உம் பேரருளால் உமது இல்லம் சென்றிடுவேன் உம் திருத்தூயகத்தை நோக்கி இறையச்சத்துடன் உம்மைப் பணிந்திடுவேன்" (திருப்பாடல் 5:7).

**1. திருப்பலிக்கு ஆயத்தப்படுங்கள்**

திருப்பலிக்கு செல்லுவதற்கு முன்பதாகவே அதற்கான ஆயத்தங்களை செய்யுங்கள். திருப்பலிக்காகவும், அதை நடத்தும் ஒவ்வொருக்காகவும் செபியுங்கள். புதிய ஆத்துமாக்களை அழைத்துவர திட்டமிடுங்கள்.

**2. தவறாமல் வாருங்கள்.**

தவிர்க்க முடியாத காரணத்தை தவிர, திருப்பலிக்கு எக்காரணத்தைக் கொண்டும் போகத் தவறாதீர்கள். "எந்த வொரு வேலையும் அவர் ஆலயம் செல்லுவதிலிருந்து தடுத்தது இல்லை" என்று முதலாவது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வாசிங்டனை பற்றி கூறப்படுகிறது.

**3. சீக்கிரமாய் வாருங்கள்.**

திருப்பலிக்கு காலம் தாழ்த்தி, அவசர அவசரமாக வருவது உங்களுக்கும், மற்றவர்களுக்கும் உகந்தது அல்ல. ஆலயத்திற்கு சரியான நேரத்திற்கு வரும்போது ஆண்டவரை நீங்கள் கனம் பண்ணுகிறீர்கள்.

**4. முழு குடும்பத்தையும் அழைத்து வாருங்கள்**

திருப்பலி நேரம் என்பது உங்கள் குடும்பத்தில் யாராவது ஒருவர் மட்டும் செல்லக்கூடிய சிறப்பு கூடுகை அல்ல. "நானும் என் வீட்டாருமோவென்றால் ஆண்டவரையே வணங்குவோம்" என்று யோசுவா கூறுவதை நினைவு கூருங்கள்.

**5. கூடுமானவரை முன்வரிசையில் அமருங்கள்**

பின்வரிசைகளை தாமதமாய் வருபவர்களுக்கும், குழந்தையை வைத்திருக்கும் தாய்மார்களுக்கு விட்டு விடுங்கள்.

**6. பயபக்தியாய் இருங்கள்**

ஆலயம் என்பது திரையரங்கமோ அல்லது பொழுதுபோக்கிற்கான இடமோ இல்லை. நீங்கள் திருப்பலிக்கு வருவது ஆண்டவரை ஆராதிப்பதற்காகவே தவிர, சிரிப்பதற்கோ, மற்றவர்களோடு பேசிக் கொண்டிருப்பதற்கோ அல்ல. உங்கள் தொலைபேசியை நிறுத்தி வையுங்கள். திருப்பலி வேளையில் ஆண்டவர் பிரசன்னம் மிகவும் பயபக்திகுரியது.

**7. பரிவுடன் நடந்து கொள்ளுங்கள்**

வரிசையின் ஓரத்தில் அமர்ந்து கொண்டு மற்றவர்களை உள்ளே செல்லுங்கள் என்பதை தவிருங்கள். வயதானவர்களுக்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கும் வசதியான இருக்கைகள் கிடைக்க உதவுங்கள்.

**8. உற்சாகமாய் பங்கு பெறுங்கள்**

திருப்பலியில் உற்சாகமாக ஈடுபடுங்கள். மறையுரை நேரத்தில் கவனமாய் கவனியுங்கள், குறிப்பெடுங்கள். அச்சிடப்பட்ட வேதாகமத்தை கொண்டு வர மறக்காதீர்கள். பார்வையாளராய் இருக்காதீர்கள். பிரார்த்தனை செய்பவர்களாய் இருங்கள்.

**9. புதிதாய் வருபவர்கள் மேல் நோக்கமாயிருங்கள்**

அவர்கள் நம்முடைய சிறப்பு விருந்தினர்கள். உங்கள் வீடுகளில் உங்கள் விருந்தினர்களை எப்படி உபசரிக்கிறீர்களோ அப்படி உபசரியுங்கள்.

**10. உற்சாகமாக கொடுங்கள்**

உற்சாகமாய் கொடுக்கிறவர்களிடத்தில் ஆண்டவர் பிரியமாய் இருக்கிறார். இலவசமாய் பெற்றீர்கள் இலவசமாய் கொடுங்கள். உங்கள் காணிக்கை ஆண்டவருக்குரியது என்பதை நினைவுக்கூருங்கள். ஆண்டவருடைய சமூகத்திற்கு வெறும் கையாக வர வேண்டாம் என்று வேதாகமம் கூறுகிறது.

**11. முடிந்தவுடன் ஓடாதீர்கள்**

ஆலயத்தில் தீ பிடித்தது போல திருப்பலி முடிந்தவுடன் ஓடாதீர்கள். மற்றவர்களிடம் நட்புடன் பேசுங்கள். குறைந்தது மூன்று முதல் ஐந்து பேருக்காவது கைக்குலுக்கி செல்லுங்கள். தனிமையாக நிற்பவர்களை கவனித்து விசாரியுங்கள்.

**12. தவறாமல் பங்குபெறுதல்**

திருஅவையில் உள்ள சிறு சிறு குறைகளை பார்த்து திருஅவைக்கு வராமல் இருப்பதை நிறுத்தாதீர்கள். பூரணமான திருஅவை என்று உலகில் ஒன்றுமில்லை. நாம் அனைவரும் பூரணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம் என்பதை மறவாதீர்கள்.

**13. திருஅவை என்பது ஒரு குடும்பம்**

"நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்" என்றார். (யோவான் 13:35.)

**ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களை ஆசிர்வதிப்பாராக!**




# வார்த்தை

ஒரு மனிதனின் வாயிலிருந்து வருகின்ற நலமான வார்த்தை இன்னொரு மனிதனின் வாழ்வை நல்ல விதமாக வாழவைக்கின்றது. அந்த வார்த்தையால் அவனுடைய வாழ்வு மேன்மேலும் மகிழ்ச்சியாக வாழ, வளர, வாழ்வை மேலோங்கச் செய்கின்றதென்பது உலகமறிந்த உண்மையல்லவா? ஆம். அது எந்தளவுக்கு உண்மையென்றால் அன்றாட வாழ்க்கையில் நானோ அல்லது நீங்களோ ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்து வெளியே செல்லுவதற்காக உடுப்பை அயன் செய்து அந்த அழகான உடையை உடுத்தி என் உருவம் தெரியும் கண்ணாடி முன் நின்று தலைவாரி, பவுடர் போட்டு பெண்ணாக விருந்தால் பொட்டு வைத்து பூச்சூடி வரும் போது எமது வீட்டிலுள்ள உறவுகளில் யாராவது ஒருவர் எங்கள் முன்னால் நின்று "அச்சா... நல்ல வடிவாயிருக்கிறீங்கள், இந்த சேட் அல்லது சாறி உங்களுக்கு நல்ல வடிவாயிருக்கு" என்று மட்டும் ஒரு வார்த்தை சொன்னால் போதும். எம் மனதிற்குள் பூரிப்பு பொங்கியெழும். அதை அனுபவித்தால் தான் இதையும் உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். அந்த வார்த்தையின் பின் மீண்டும் மீண்டும், கண்ணாடி முன் சென்று தலைவாரி என் உருவத்தை மறுபடியும் பார்த்து பார்த்து ரசிக்க ஆசைப்படும் மனம். அந்தளவுக்கு அந்த "வடிவாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தையினால் எமது உள்ளத்தின் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. இது தான் மனித இயல்பு. வீட்டை விட்டு வெளியே செல்கின்ற போதும் வழியில் ஒருவர் நீ நல்ல வடிவாயிருக்கின்றாய் என்று சொன்னாலும் எம் மகிழ்ச்சி இருமடங்காக கடந்து செல்லும் எல்லைக்கு அளவேயில்லை. ஆலயத்திலோ, அலுவலகத்திலோ, வெளிக் கொண்டாட்டத்திலோ சந்திக்கும் இன்னொரு நபரும் அழகாயிருக்கின்றீர்கள் என்ற வார்த்தையை சொல்லி விட்டால் அன்றைய நாள் எமக்கு பொன்னான நாளாக அமையும். அன்று முழுவதும் ஆகாயத்தில் பறப்பது போன்ற பிரமையில் மனம் அக்களிக்கும்.

மனித வாழ்வில் வார்த்தை எவ்வளவு முக்கியமாகயிருக்கின்றது என்று பார்த்தீர்களா? நோயுற்றவனுக்கு கூட மருந்தை விட அன்பான வார்த்தைகளும் பரிவும் முக்கியமான போது அவனுடைய நோய்களும் குணமாக வாய்ப்புக்கள் உண்டு. சினிமா படமான வசூல்ராஜா எம்.பி.பி.எஸ் என்ற படம் வார்த்தைகளால் பல விளக்கங்கள் சித்தரித்து எடுத்துக்காட்டாக அமைந்த படமாகவுள்ளது.

நீ அணிந்திருக்கும் உடை வடிவில்லை என்ற வார்த்தையை கேட்டால் அந்த நாளே எமக்கு குழப்பத்தையும் வெறுப்பையும் தந்துவிடும். அதனால் தான் "தீயினால் சுட்ட புண் ஆறுமே ஆறாது நாவினால் சுட்ட வடு". உனக்கு கோபம் வருகின்றது என்றால் மௌனமாக இருந்தால் நீ மேதையாகலாம், உனக்கு ஆத்திரம் வருகின்றது என்றால் அமைதியாகயிருந்து ஆண்டவனை பிரார்த்தனை செய், நீ தெய்வமாகலாம். ஆகவே மனிதனாகிய நீ யாரோடும் பேசும் போது நல்ல விதமான வார்த்தைகளால் புண்பட பேசாது பண்பட பேச வேண்டும்.

இந்த உலகம் கலங்குவது அணுகுண்டினால் அல்ல வாய்க்குள் அடங்கியிருந்து வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளால் தான். நாம் சில மனிதர் முன் போய் மணிக்கணக்காய் பேச ஆசை வரும். ஒரு சில மனிதர்கள் முன்னால் செல்லவே விருப்பமே வராது பயமாகவிருக்கும். ஏனென்றால் வாயில் என்ன ... என்ன வார்த்தைகள் வரும் என்று தெரியாது. உன் நாக்கை உன்னால் அடக்க முடியவில்லையென்றால் நீ ஊமையாக இருப்பது மேல். கிறிஸ்தவர் களாகிய நாம் நல்ல நல்ல வார்த்தைகளைப் பேசுவோம். மற்றவர்களின் வாழ்வில் தீயை ஏற்றாது தீபம் ஏற்றுவோம். மற்றவர்களுக்கு ஒளிமயமான எதிர் காலத்தை ஏற்படுத்தக்கூடிய நல்ல வார்த்தைகளை கூறி அவர்களை மகிழ்வித்து நாமும் மகிழ்ந்திருப்போம். எம்மிடம் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதை விட மற்றவர்கள் வாழ கொடுக்கக்கூடிய நல்ல வார்த்தைகளை கொடுப்போம்.


மனிதனின் வார்த்தைக்கே இவ்வளவு என்றால் இறைவனின் வார்த்தைக்கு எவ்வளவு? "விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் என் வார்த்தைகளோ ஒழிந்து போகா" என்று இயேசு கிறிஸ்து கூறிய இந்த வார்த்தைகளில் உண்மையுள்ளது, அற்புதமிருக்கிறது, அதிசயமிருக்கின்றது. இதைவிட கிறிஸ்தவ மக்களாகிய எமக்கு வாழ்வேயிருக்கின்றது என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. இறைவார்த்தையில் மகிழ்ச்சியிருக்கின்றது, மார்க்கமிருக்கின்றது, மாற்றமிருக்கின்றது. கடுகளவு விசவாசமிருந்தால் மலையைக்கூட பெயர்க்கலாம் என்ற இறைவார்த்தையே பல பல வழிகளில் தெய்வீக வாழ்வை கொண்டு வரும் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு எம்மை தயார்படுத்தி வாழ்வதற்கு இறைவார்த்தையை அடிக்கடி வாசிக்க வேண்டும். வாசித்த வார்த்தையால் எம் வாழ்வு வாழப்பட வேண்டும். இறைவார்த்தையை வாசித்து. எமது வாழ்வை மாற்றி வாழ முற்படுவோம்.

**S.B.பீற்றர் போல்**
**யாழ்ப்பாணம்**

இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்னமாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளியின் சின்னமாகியது, நல்லிணக்கத்தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிவங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, சிலுவைளின் சரித்திரம் என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன்.

**அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர், "தஹம் செவண" இடைநிலைக் குருமடம், களுத்துறை.**

15 "எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" – இயேசுக்கிறிஸ்து



## குறோஸ்லெற் சிலுவை

இச்சிலுவை பணிச்சிலுவை என்றும் அழைக்கப்படும். ஏனெனில் உலகெங்கும் நற்செய்தி பரப்பப்பட்ட திசைகளைக் குறித்து நிற்கிறது. இச் சிலுவை நான்கு லத்தீன் சிலுவையிலிருந்து உருவாக்கப்பட்டு வடதிசையையும் தென்திசையையும் கீழ்திசையையும் மேல்திசையையும் குறித்து நிற்கிறது. அதே நேரம் இது நான்கு நற்செய்தியாளர்களான மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் என்பவர்களை குறிக்கிறது.

புனித யூலியன் சிலுவையும் crosslet சிலுவையின் இன்னுமொரு உதாரணமாகும். fitched சிலுவையானது திருத்துவத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக மூன்று இலத்தீன் சிலுவைகளை கொண்டது. இது புனித யாக்கோப்பு சிலுவையை ஒத்தது.

# காவலன் கலசம்



## நண்பனுக்கு ஓர் மடல்



*அன்பு நண்பா,*

நலம். பல நாளும் உன் முயற்சியுடனான நலன்களே! இம்மாதம் இறந்த ஆத்துமாக்கள் மாதம் எனக் கூறியிருந்தாய். உமது வீட்டில் இறந்த உறவுகளை நினைவுகூர உறவினர்கள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்போடு இருக்கின்றாய். இறந்தவர்களை நினைவு கூர இருப்பவர்கள் ஒன்றுகூடுவது நல்லதுதான். அவர்களது நற்காரியங்கள் நம் குடும்பம் மற்றும் சமூகத்தில் மீட்டுப்பார்க்க கிடைத்த அரிய சந்தர்ப்பமாக இதனைக் கருத வேண்டும். புனிதர்களாக இல்லாவிட்டாலும் நல்லமனிதர்களாக வாழ்ந்தவர்களின் நினைவுகள் குடும்பத்திலும் சமூகத்திலும் வார்த்தைகளால் மட்டுமல்ல அவர்கள் செய்த வாழ்வுப் பணிகளாலும் நினைவுகூரப்பட வேண்டும்.

இறந்தோரின் வாழ்வை நமக்கு படிப்பினையாக கொண்டால் நாம் ஏது செய்தோம், செயல்படுகிறோம் என எம்மைச் சிந்திக்கத்தூண்டும். இளமையில் இதனை ஆய்வு செய்ய முயன்றால் அதுவே உன் வாழ்விலும் முன் மாதிரிகைகளை, மாற்றத்தை ஏற்படுத்த வழிபிறக்கும் அல்லவா! ஒரு சிலரது வாழ்வு இறந்த பின்னும் வாழ்கிறது. வேறு சிலர் உலகில் வாழும் போதே இறந்தவர்களாக, நடைப்பிணங்களாக வாழ்ந்து மடிகின்றார்கள்.

"சீவியத்தில் நேசித்தவர்களே என் மரணத்திலும் என்னை மறவாதீர்கள்" என்பதற்கு எந்த நினைவுகள் மறக்க முடியாததாக இருக்கின்றது என்பதை மீட்டுப்பார்க்கும் தினமாக இறந்த ஆன்மாக்கள் தினம் நம்மைச் சிந்திக்கவைக்கிறது.

தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்து மரித்தவர்களின் நினைவுகள் குடும்பத்துக்கப்பால் பலரது மனங்களில் கார்த்திகைப் பூக்களாக மலர்ந்துள்ள கார்த்திகை மாத இறந்த ஆன்மாக்கள் தினத்தில் அவர்களது நினைவுகளை எம் மனங்களிலும், மண்ணிலும் சுமந்து அவர்களின் அர்ப்பண வாழ்வை எம் கண்ணீரால் நன்றியுடன் நினைக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

இறந்த ஆன்மாக்களை நினைவுகூருகின்ற இவ்வேளையில் இளையோராகிய நாம் நமது நற்செயல்களால் பிறருக்கு வாழ்வளிக்கவும், நல்வழிகாட்டவும் வினைத்திறனுடன் கூடிய முயற்சிகளை இறை விசுவாசத்துடனும், விவேகத்துடனும், இதய சுத்தியுடனும் மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

இளமையின் ஆளுமைகளை வீணே சிதறடிக்காமல் நமக்கும் பிறருக்கும் பயன்படும் வாழ்வாக நம் வாழ்வை மாற்றியமைப்பதே கார்த்திகைப் பூக்களுக்கு நாம் தெளிக்கும் பன்னீராகும்.

உன் அடுத்த மடலுடன் தொடர்கிறேன்.

அன்புடன்
செ.யோசப்பாலா
உளச் சமூகச் சீராளன்

எம்மை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்துள்ள அன்புக்குரியவர்களை நினைவு கூர்வோம். அவர்கள் நம்மோடு வாழும் போது எம்மீது அவர்கள் காட்டிய அன்பு, பரிவு, கரிசனைகளை வெறும் தொல்லைகளாகக் கருதியதுண்டு. பல வேளைகளில் அவர்கள் செய்த நன்மைத்தனங்களைக்கூட வெறுத்துள்ளோம். எனவே அந்த அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வோம். அவர்களின் ஆன்மா இறைவனின் திருவடியில் இளைப்பாறும் பொருட்டு இறைவேண்டுதல் செய்வதற்கு அழைக்கப்படுகின்றோம்.

மரம் – தளபாடங்கள் ஆகிறது
மான் தோல் – ஆசனமாகிறது
மயிலின் இறகு – விசிறியாகிறது
யானையின் தந்தம் – அலங்காரமாகிறது
புலியின் பல் – ஆபரணமாகிறது
மீன் செத்தால் கருவாடு நாம் செத்தால் ??????

எனவே எமது வாழ்வில் இறைவனில் நம்பிக்கை வைப்பதன் மூலமாக எமது ஆன்மாவை நித்திய வாழ்வில் இணைக்க முடியும்.

எமது வாழ்வுக் கப்பலை துன்ப அலைகளும் பல சோதனைப் புயல்களும் தாக்கினாலும் இறை நம்பிக்கையை

## "நீத்தார் பெருமை"

வன்னிவாழ் இதயம்
ம. சூசைமுத்து

அவர்கள் வயோதிபர்கள் தானே போய் விட்டார்கள் கதை முடிந்து விட்டது என்ற உணர்வுடன் அவர்களை மறந்து வாழ்வது நன்றிகெட்ட தனமாகும். நமக்கும் ஒரு ஆன்மா உண்டு. அதுமட்டுமல்ல இறந்து போன உறவுகளின் இரத்தம் இப்போது கூட எமது உடலில் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றது என்பதை எம்மால் மறந்து விட முடியுமா? நாம் நல்லவர்களாக வாழ்வதற்கு தங்களையே தியாகம் செய்தவர்களுக்காக எமது வாழ்நாட்களில் அவர்களுக்காக இறைவேண்டல் செய்வோமாக.

"எமது வாழ்வின் இலட்சியத்தில் சில துளிகள்"

நாம் வாழும் போது தான் எம்மால் நன்மைகள் செய்ய முடிகிறது. இறந்த பின் எதுவுமே செய்ய முடியாது.

உதாரணமாக - ஏனைய உயிரினங்கள் செத்த பின்னும் செயற்படுகின்றன...

நங்கூரமாகக் கொண்டிருப்பவர்களை எதுவும் செய்யமுடியாது. எனவே வாழ்வின் எச்சூழமைவுகளிலும் இறை நம்பிக்கை இழக்காதிருப்போமாக. சாவு என்பது உடலை விட்டு உயிர் பிரிவதல்ல... அன்பு செய்யாமல் இருப்பதே... அடிமைத் தனத்தில் அல்லலுறுவதே... ஆண்டவரை தினமும் அனுபவியாமல் இருப்பதே...

இறந்தோரின் கல்லறைகள் - வாழ்வோரின் கருவறைகள. இறைவார்த்தை உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் நம்பிக்கை கொள்பவன் ஒரு போதும் சாகான். (யோவான் 11:23).

**சிந்தனைக்கு...** அத்தனை பேரையும் நேசி - இறைவார்த்தையைத் தினம் வாசி - ஆண்டவர் சொல்வதை யோசி - முத்துக் கிரணத்தை வீசி... தந்தருள்வார் அத்தனை பேருக்கும் ஆசி...

## கருணை மழை பொழிதல்

கனிந்த உள்ளத்தோடு நீங்கள் கருணை மழை பொழிய ஆரம்பித்ததும் கடவுளுடன் இணைந்து களிப்புறுவீர்கள். நீங்கள் காண்பது, கேட்பது, பேசுவது, உணர்வது எல்லாம் உங்களது நல் உள்ள வெளிப்பாடாக அமைவதை அனுபவித்து அறிந்துகொள்வீர்கள். புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் 6:1-10 பகுதியில் பின்வருமாறு விளக்குகின்றார்.

**1. கனிந்த உள்ளத்தோடு தவறு செய்தோரைத் திருத்துங்கள்.**

தண்டிப்பது வேறு. திருத்துவது வேறு. தண்டிப்பதன் ஆதாரம் கோபம். திருத்துவதன் ஆதாரம் அன்பு. திருத்தந்தை 2ம் யோண் பவுல் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் திகதி முகமது அலி அக்க என்பவரால் சுடப்பட்டார். ஆறு மணித்தியால அறுவைச் சிகிச்சையின் பின்னர் ஓரளவு நலமடைந்ததும் திருத்தந்தை சிறைச்சாலையில் கடும் காவலில் வைக்கப்பட்ட கைதியைக் காணச் சென்றார். தன்னைக் கொல்வதற்காகத் துப்பாக்கி ஏந்திய கைகளை அன்புடன் தாங்கிக்கொண்டு திருத்தந்தை திருவாய் மொழிந்தார்:

"முகமது அலி அக்க! நீ என் அன்புச் சகோதரன். உன்னை என் இதயத்தின் அடியிலிருந்து மன்னித்து விட்டேன்."

**2. சோதனைக்கு உள்ளாகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.**

வாழ்வில் சோதனைகள் வருவது சகஜம். எனினும், சோதனையை வென்று சாதனை படைத்திடவே முயற்சி எடுங்கள். சோதனையைத் தவிர்ப்பதற்கு முன் கட்டமாக தவறான நண்பர்கள், தவறான சந்தர்ப்ப சூழ்நிலைகள், தவறான பழக்க வழக்கங்கள் போன்றவற்றை முற்றுமுழுதாகப் புறநீங்கல் செய்யுங்கள்.

**3. மற்றவர்களது சுமைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள்.**

சுமை சுமத்துபவர்களாக அல்ல சுமைதாங்கிகளாகவே உங்களை ஆக்கிக்கொள்ளுங்கள். "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்" (மத்தேயு 11:28-29).

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

**4. பெருமைப்படாதீர்கள்.**

"நான் பெருமையடையலாம் என்று கடவுளிடம் பலத்தைக் கேட்டேன். ஆனால் கீழ்ப்படியத் தாழ்மையைக் கற்கும்படி பலவீனமாக்கப்பட்டேன். நான் மனிதரின் புகழைப் பெறுவதற்காகக் கடவுளிடம் சக்தியைக் கேட்டேன். ஆனால் கடவுளின் தேவையை உணர எனக்குப் பலவீனத்தைத் தந்தார்" என்று மொழிந்தார் கீதாஞ்சலி புகழ் இரவீந்திரநாத் தாகூர். உண்மையும் தாழ்மையுமே உயர்வுக்கான ஏணிப்படிகள்.

**5. உங்களது செயல்களை ஆய்ந்துயாருங்கள்.**

உங்களை நீங்கள் ஆய்வு செய்வது, உங்களது செயல்களை ஆய்வு செய்வது நீங்கள் பக்தியோடு முன்னெடுக்கும் அகப்பயணமாகும். உங்களது பலங்களையும் பலவீனங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பது உங்களது உள்ளகச் சக்தியை விழிப்படையச் செய்வதாகும்.

**6. தீமை விதைப்போர் தீயதையே அறுவடை செய்வர்.**

நீங்கள் எதை விதைக்கின்றீர்களோ அதையே அறுவடைசெய்வீர்கள். நஞ்சு விதையைவிதைத்துவிட்டு எவ்விதம் நல்ல மரத்தை எதிர்பார்க்கமுடியும்?

**7. நன்மை விதைப்போர் நன்மையையே அறுவடைசெய்வர்.**

"கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். நல்லவர் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (லூக்கா 6:43-45).

நீங்கள் நல்லவர் என்று சொல்லும் அளவிற்கு உங்களது நன்மைத் தனம் உங்களை வளர்படுத்தட்டும்!

## சிந்திக்க ஓர் சித்திரம்





## பார்வை...

தன்னை **"அற்ப பிராணி"** என்று அழைத்த மலையைப் பார்த்து அணில் சொன்னது: பொருளை அளக்க இயலா நிலையும், தோற்றமும் உனக்கு இருப்பது உண்மைதான். ஆயினும் ஒரு பொருளைக் கொண்டே உலகம் ஆகுமா? பற்பல பொருளும், பற்பல பருவமும் ஒன்றாய் சேர்ந்தது தானே உலகம்! உயரத்திலும், உறுதியிலும், அளவிலும், விரிவிலும் நீ உயர்ந்தவனாயினும் என்னைப் போல் ஒரு சிறு மாம்பழத்தைக் கடிக்க உன்னால் இயலுமா? என்னைப்போல் ஓடியாடத்தான் உன்னால் முடியுமா? அப்படியிருக்க என்னை நீ அற்பமாக எண்ணலாமா? அற்பம் என்று உலகில் ஒன்றுமில்லை. அனைத்தும் அதனதன் நிலையிலிருந்து தத்தமக்குரிய பணியைச் செய்வதால் தான் உலகம் சீராக இயங்குகிறது. இதில் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? என்று எப்படி உன்னால் கணிக்க இயலும்? அணிலின் ஞானத்தைக் கேட்ட மலை பிரமித்து நின்றது. கடவுளின் படைப்பில் உயர்வு தாழ்வு காணும் தகுதி நமக்கில்லை. ஒன்றைப் போற்றுவதும், மற்றொன்றை இகழ்வதுமான மனித கண்கொண்டு பார்ப்பதை விலக்கி கடவுள் கண்கொண்டு உலகைக் காண்போம்.

'தான் படைத்ததெல்லாம் நல்லதென்று கடவுள் கண்டார்' ஆனால் நாம் ...?

# காவலன் கலசம்




## என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(செல்வம், தென்மாராட்சி)*
***கேள்வி: நம் நாட்டு இன்றைய அரசியலையும், அரசியல் தலைவர்களையும் வெளிநாட்டவர்கள் பார்த்துச் சிரிக்கின்ற அளவுக்கு ஆகியிருக்கின்றதே?! என்ன நடக்கப்போகின்றது?***

***பதில்:*** ஒருவர் சுவாரசியமாக ஒருதடவை குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது. நம் நாட்டு 'ஆட்டோ' காரனுக்கும் அரசியல்வாதிக்கும் ஓர் ஒற்றுமையுண்டு. என்ன தெரியுமா? இவர்கள் இருசாராரும் எப்போது எந்தப்பக்கம் திரும்புவார்கள் என்று எவருக்கும் தெரியாது! அது தான், நம் நாட்டு அரசியலிலும் தற்போது நடந்துகொண்டிருக்கிறது செல்வம்.

*(மதன், யாழ்ப்பாணம்)*
**கே: மைத்திரியும் மகிந்தவும் இணைந்துவிட்டார்கள். யாரும் எதிர்பார்த்திராத அரசியல் மாற்றம்! இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** மதன், 'நல்லாட்சி'யும் 'நாயாட்சி'யும் சேர்ந்திருக்கிறது! 'நல்லாட்சி' என்ற சுலோகத்தோடு 'மைத்திரி - ரணில்' அரசு ஆட்சிப்பீடம் ஏறியது. 'நாயாட்சி' என்று இங்கு குறிப்பிடுவதற்கான காரணம் 'நல்லாட்சி' அரசுக்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்தில்தான் கட்டாக்காலி நாய்களுக்கு மிகுந்த சுதந்திரம் கொடுக்கப்பட்ட காலமாகும். அதாவது கட்டாக்காலி நாய்களைக் கூட அழிக்கமுடியாத, கட்டுப்படுத்தமுடியாத சட்ட வரைபு அங்கீகரிக்கப்பட்டது அக்காலத்தில்தான்! அதனால், தெருநாய்கள் சுதந்திரத்தை அனுபவித்தன, அனுபவிக்கின்றன. ஆனால், மனிதர்களாகிய நாம் படும்பாடு பெரும்பாடு! நாய்களால் கடியுண்டு, நாய்களால் விபத்துக்களைச் சந்தித்து, நாய்களால் வீதிகள் நரகமாக்கப்பட்டு... என நாய்களால் ஏற்படும் அவலம் நீறுபூத்த நெருப்பாய் எரிகிறது. இதனை மனதில் வைத்துக்கொண்டுதான், 'கேவலம்!' என்றொரு கவிதையை சில ஆண்டுகளுக்கு முன் எழுதினேன்: "எங்கள் பிள்ளைகள் வேட்டையாடப்பட்டபோது இம் மண்ணில் தெருநாய்கள்கூட பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டன!" என்று! அச்சட்டத்தினால்தான், இன்று நம் பிரதேசங்களில் நாய்கள் தாராளமாகப் பெருகிப்போய்க் கிடக்கின்றன. 'பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்' என்ற இறைவனின் கட்டளையை மனிதன் மறந்துபோக, நாய்கள் அதனைக் கவனமாகக் கடைப்பிடிப்பதால் அவற்றின் பெருக்கம் தாராளமாகிவிட்டது! அத்துடன் கட்டாக்காலி நாய்களை அழிக்க முடியாத சட்டமும் ஒன்றுசேர வேறென்ன 'நல்லாட்சி'யும் 'நாயாட்சி'யும் தான் இணைந்திருக்கிறது எனக் கூறுவதில் என்ன தவறிருக்கிறது? 'நல்லாட்சி'யும் 'நாயாட்சி'யும் இணைந்து 'நாலுபேர் பார்த்துச் சிரிக்கும் ஆட்சி'யாக ஆகாமலிருந்தால் சரி?!

*(துசி, கிளிநொச்சி)*
**கே: பாடசாலை படித்துக் கொண்டிருக்கும் காலத்தில் காதலிக்கலாமா? யோசித்துப் பதில் எழுதுங்கள்!**

**ப:** யோசிக்காமல் பதில் எழுத வேண்டிய சில கேள்விகள் , உண்டு. அதில் ஒன்றுதான் நீங்கள் கேட்ட கேள்வி துசி! ஏன் தெரியுமா? படித்துக் கொண்டிருக்கும்போது இச்சமாசாரத்தைத் தொடங்கினால் சாமி தரிசனம் காணப் புறப்பட்டு சக்கரபொங்கலோடு நின்றவர்களுடைய பட்டியலில் நீங்கள் சேர்க்கப்படவேண்டிய நிலையேற்படும்! துசி, 'காதல் பனையேறுவது மாதிரி! ஏறினா நொங்கு, சறுக்கினால் சங்கு' என அனுபவப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள்! இவ்விடயத்தில் சறுக்கினால் சங்கு என்று சொல்லும்போது சங்கு சட்ணியாகி விடும் என்பதையும் மனதிலிருத்திக் கொள்வது அவசியம். முதலில் நன்றாகப் படியுங்கள், பின்னர் காதல் செய்யுங்கள். முதலில் காதல் செய்யலாம், பின்னர் படிக்கலாம் என எண்ணுவீர்களாக இருந்தால் என் ஆழ்ந்த அனுதாபங்களை இப்போதே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைவேன்!

*(திலகா, யாழ்ப்பாணம்)*
**கே: நுண்நிதி கடன்கள் பெரும் தொல்லையாக மாறி இருக்கின்றதே! என்ன செய்யலாம்?**

**ப :** வேலியில போற ஓணான மடியில பிடிச்சிவிட்ட மாதிரி எனப் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருப்போம்! உண்மையில், 'மடியில்' என்ற வார்த்தைக்குப் பதிலாக வேறொரு வார்த்தையைத்தான் சொல்லுவார்கள். கொஞ்சம் நாகரிகம் கருதி அச்சொல்லுக்குப் பதிலாக 'மடியில்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறேன். அது ஒருபக்கம் இருக்க, இன்று பலருடைய செயற்பாடுகள் மேற்சொன்ன பழமொழியைப் போன்று அமைந்திருக்கின்றன. நுண்நிதி கடன்களைப் பெறுவதால் பல தொல்லைகள் எனத் தெரிந்தும் பலர் அத்தொல்லைகளை விலைகொடுத்து வட்டியும் செலுத்தி வாங்குகிறார்கள் என்பதைத்தான் புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. வீதியில் போய்க்கொண்டிருந்த பேயை வில்லங்கமாய் வீட்டுக்குள் கொண்டுவந்து வைப்பதுபோன்ற ஒரு செயற்பாடாகவே இந்த நுண்நிதி கொடுக்கல் வாங்கல்களைப் பார்க்கவேண்டி இருக்கிறது. இத்தொல்லையிலிருந்து விடுபட இக்கடன்களை எக்காரணங்களுக்காகவும் பெறாமல் இருப்பதுதான் இத்தொல்லையிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி. செய்வீர்களா? நமது மக்கள் செய்வார்களா?

*(சசி, வவுனியா)*
**கே: சிலர் மற்றவர்களில் பிழை பிடிப்பதும், குற்றம் சுமத்துவதும் தான் வேலையாகக் கொண்டிருக்கின்றார்கள்? இவர்களைக் குறித்து என்ன செய்யலாம்?**

**ப :** இவர்கள், பழி சுமத்தத் தெரிந்தவர்களே தவிர வழி காட்டத் தெரியாதவர்கள்! தன் பணியாளன் திடீரென வருகை தாராததினால் அவன் செய்யும் வேலைகளை எல்லாம் கவிஞர் ரவிந்திரநார் தாகூர் செய்யவேண்டியதாயிற்று. மறுநாள், அப்பணியாளன் வேலைக்கு வந்த போது ரவிந்திரநார் தாகூர் வேலைக்கு வராததற்கான காரணத்தை கொஞ்சம் கோபத்தோடு வினவினார். தனது மகன் இறந்துபோனதாகவும் அவனின் இறுதிக் கிரிகைகளை நிறைவேற்றியதால் வரமுடியாது போனதாகவும் சொல்கிறான்! ரவிந்திரநார் தாகூர் தனது கோபத்தை நினைத்து மனம்நொந்து வருந்தினார். நம்மோடு இருப்பவர்கள் - வேலைசெய்பவர்கள் எத்தனை வேதனைகளோடும், எத்தனை எத்தனை மனச்சுமைகளோடும் இருக்கிறார்கள் என்பதை பலவேளைகளில் புரிந்து கொள்ளாமல் நடந்துகொள்பவர்கள் இன்று அதிகமாகிவிட்டனர். 'தங்கள் கண்ணில் இருக்கும் துரும்பை கவனிக்காமல் அடுத்தவர் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பரர்ப்பவர்கள்' அவர்கள். அவர்களை விட்டுவிட்டு உங்கள் வேலையில் கவனம் செலுத்துங்கள்.

(அமலன், மன்னார்)
**கே: குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையில் அடிக்கடி சண்டை வருகின்றது. தடுக்க என்ன செய்யலாம்?**

**ப:** குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில், கணவன் மனைவிக்கிடையில் அடிக்கடி வாய்த்தர்க்கம் வரும். ஒருதடவை, கணவன், "அடியேய், உன்னப் பாத்து பயப்படுறன் எண்டு நினச்சுப்போடாத!" என்றான். மனைவி கொஞ்சம் குரலை உயர்த்திக் கூறினாள்: 'பொய் சொல்லாதேயும் காணும்! என்னைப் பெண்பாக்க வந்தபோது ஆறுபேருடன் வந்தாய்! நிச்சயம் பண்ணும் போது இருபதுபேருடன் வந்தாய்! தாலிகட்டும் போது இருநூறுபேருடன் வந்தாய்! ஆனா, கல்யாணத்துக்கு பிறகு, நான், உன் வீட்டுக்குத் தனியாகத்தான் வந்தன்! இப்ப சொல்லு, யார் யாருக்குப் பயமென்று!' அடுத்த பேச்சுப் பேசாமல் கணவன் அட்டை சுருள்வதுபோல அடங்கிப்போனான்! இப்படிச் சில புதிய கண்டுபிடிப்புகளோடு வாதங்களுக்குப் பிரதிவாதங்களைத் தெரிவித்தால் சண்டையில் எதிர்க்கட்சி சரணடைவதைத் தவிர வேறு வழியில்லாது போய்விடும்.

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# எம் நினைவுகளில் மறுவாழ்வு – நிலைவாழ்வு

**அருட்சகோதரி மேரி றொபேட்சினி**
**செபமாலைக் கன்னியர் மடம்**
**பரந்தன்**

பிறப்பு என்ற ஒன்றை சந்தித்தவனுக்கு, இறப்பு என்ற ஒன்று சாத்தியம். பாரினைப் பார்க்க வந்த எந்த ஒரு ஜீவனும் ஒருநாள் பாரினைக் கடந்து தான் ஆகவேண்டும். வந்தவர்கள் செல்வதற்கு வழிப்பயணம் செய்ய வேண்டிய இடம் தான் இப்பூமி. பூமியிலே பயணம் செய்து வெற்றியடைவது தான் இலக்கு. முழுமனிதமும் அதுதான்.

இதை மறுத்தாலோ, மறந்தாலோ தோல்விகள் தான் மிஞ்சும். நரகம் செல்லக்கூடாது என்று முடிவெடுத்து விட்டால் நாம் செய்யும் பயணங்களில் எத்தனை தடைகள் வந்தாலும் உறுதியுடன் தாண்டி வீரவிசுவாசத்தில் தடம் பதிக்க முடியும். நம்மைப் படைத்தவர் நல்ல கடவுள். இரக்கம் நிறைந்த கடவுள். நாம் நல்லவர்களாய் மீள்வதற்கு அவர்தம் வழிகள் வாழ்வுக்குரியவை பாதைகளும் குறுகியவை, படைத்தவரை தூரவைத்துவிட்டு நாம் வழி தேடி ஓடினால் அவை அகலமானவை, ஆனால் சாவுக்குரியவை.

வாழ்வுக்குரியவைகளில் சரியாக தடம் பதித்து சென்றவர்கள் புனிதர்கள். கடவுளின் நிரந்தர வீட்டில் என்றென்றைக்குமாய் கலந்துவிட்டவர்கள், கடவுளில் கரைந்தே போனவர்கள். நல்ல பங்கை சம்பாதித்து நித்திய பரிசு பெற்றுவிட்டனர்.

மனிதா! நீயும் நானும் சேரவேண்டிய இடம்பற்றி சற்று சிந்திப்போமா? ஆன்மாவைக் கொல்லும் நஞ்சுகளாகிய பல நிறங்கள் கொண்ட பாவங்கள் பல்கிப்பெருகி, வஞ்சகமாய் நரகத்திற்கு இழுக்கும் பரிதாபம் இன்று உலகிலே ஏராளம். உனக்குள்ளும் எனக்குள்ளும், வீட்டிலும் வீதியிலும், நாட்டிலும் உலகிலும் நடந்து கொண்டிருக்கும் உண்மைகள் அகக் கண் திறந்து பார்க்க முனைவோமா?

உறங்கிக் கொண்டிருக்கும் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பி உனக்குள் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களைப் பார், பயமின்றி முகம் கொடுத்துப்பார்.



உண்மைகள் உறங்காமல் உன்னையே உனக்குக்காட்டித்தரும். உன் நிரந்தரமற்ற குடிலில் ஊசலாடும் உன் வெறுமை உனக்குப் புலப்பட்டு விடும். மண்ணோடு மண்ணாகிப்போகும் உன் ஊன்சதை சுருக்கி உள்ளத்தை உருக்கிக் கொண்டு, நிரந்தரத்திற்கும் படைத்தவனோடு சங்கமிக்கப்போகும் உன் ஆன்மாவை இருளில் இருந்து ஒளிக்குக் கொண்டுவா. ஆன்மாவே உண்மை. அது உன் பரம்பொருளோடு சங்கீதமாகி சங்கமமாகட்டும். மறுவுலகின் நினைவுகள் இவ்வுலகில் உன் நிரந்தரக் கனவுகளாகட்டும். வீண் விரயமாக்காமல் உன் வாழ்வுப்பயணத்தை சீர்செய்து உன்னையும், அடுத்தவரையும் ஆன்ம அழிவில் இருந்து மீட்டிட காலத்தை உன் கரங்களில் கனிவோடு தாங்கிடு. வாழ்வுக்கு வழி காண்பாய்.

# அரங்கக் கலையை தனது சுவாசமாகக் கொண்டு வாழ்ந்த அமரர் கலாபூஷணம் ஜி.பி.பேர்மினஸ்

ஏறத்தாழ 60 வருடங்களுக்கு மேல் அரங்கக்கலையுடன் தன்னை இணைத்துக் கொண்டு நடிகனாக, நாடக நெறியாளனாக, அரங்கபயிற்றுவிப்பாளனாகத் திகழ்ந்ததுடன் சிறந்த சமூக சேவகராகவும் திகழ்ந்த கலாபூஷணம் ஜி.பி.பேர்மினஸ் அவர்கள் கடந்த 09.10.2018 அன்று தனது 79 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அரங்கத் துறைக்கும், கத்தோலிக்க கலைமரபுக்கும் ஓயாது பணிசெய்த அவரது நினைவாக கலைக்காவலன் இக்கட்டுரையை பிரசுரிக்கின்றது.



குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறகரி பேர்மினஸ் அவர்கள் சிறிய வயதில் இருந்தே நாடகக்கலையுடன் தன்னைப் பின்னிப்பிணைத்துக் கொண்டவர். நடிகனாக, நெறியாளனாக, அரங்கவிதானிப்பாளனாக, அரங்கமுகாமையாளனாக, பயிற்றுவிப்பாளனாக பல்வேறு தளங்களில் பணியாற்றியவர். தனது இறுதிக்காலம் வரை நாடகத்துறையை தனது சுவாசம் போல நேசித்தவர். மிகுந்த இறைபற்றும், பொது நலநோக்கும் கொண்டவர் அதுமட்டுமன்று வாழ்வில் ஒழுக்கத்தையும், பண்பினையும் பேணி ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டுமென்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர். அவரது அரங்கப்பணிகளை பல்வேறு தளங்களில் நோக்க முடியும்

**புனித பத்திரிசியார் கல்லூரியில்..**

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலேயே ஆரம்பக்கல்வி முதல் கல்வி கற்ற இவரின் நாடகக்கலைக்கான ஆர்வம் பாடசாலையிலேயே ஆரம்பித்தது. பாடசாலையில் மேடையேற்றபட்ட பல நாடகங்களில் மாணப்பருவத்திலேயே நடித்தார். 'ரெயில்வே ஸ்ரேசன்' என்ற ஆங்கில நாடகமே இவரது முதல் நாடகம். தொடர்ந்து அருட்தந்தை லோங் அவர்கள் முதன்முதலாக மனிதர்கள் நடிக்கின்ற திருப்பாடுகளிகன் காட்சிகளை அறிமுகம் செய்தபோது முதலில் 1953 இல் ஆசிரியர்களைக் கொண்டு மேடையேற்றினார். பின்னர் அதனை அருட்பணி மரியாம்பிள்ளை அவர்களைக் கொண்டு 1956 இல் தமிழில் மொழிபெயர்த்து மேடையேற்றினார். அதில் ஆசிரியர்களும் மாணவர்களும் நடித்தனர். அத்திருப்பாடுகளின் காட்சியிலும் 1960 இல் மேற்கொண்ட காட்சியிலும் மிகமுக்கிய பாத்திரமாகிய கைப்பாஸ் பாத்திரத்தினை ஏற்று நடித்தார். இவ்வாறு மாணவப் பருவத்தில் இருந்தே நாடகத்துறையில் ஆர்வங்கொண்டு செயற்பட்ட இவர் அருட்பணி நீ.மரியசேவியர் அடிகள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின் பத்திரிசியார் கல்லூரியில் பகுதித் தலைவராகப் பணியாற்றியபோது அவர் மேற்கொண்ட இத்தாலிய திரைப்படமொன்றுக்கான மொழிமாற்றச் செயற்பாட்டில் பங்கு கொண்டார். அன்றிலிருந்து ஏறத்தாழ 60 வருடங்களாக மரியசேவியர் அடிகளுடனான அவரது உறவு தொடர்ந்தது. கல்லூரியில் இவர் மிகச்சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

**கிராமத்தில்..**

கலைவளம்மிக்க குருநகரைப் பிறப்பிடமாகக்க கொண்ட இவரின் கலை ஆர்வத்திற்கு அவரது கிராமமும் ஒரு காரணம் எனலாம். சிறுவயதில் தனது கிராமத்து நாடகங்களில் நடித்தது மட்டுமன்றி இளைஞனாக கிராமத்து இளைஞர்களையும் தனது நாவாந்துறையை சேர்ந்த நண்பர்களையும் இணைத்துக் கொண்டு பல சினிமாப்பாணியிலான நாடகங்களை நெறிப்படுத்தி தயாரித்து மேடையேற்றினார். 'எங்கே நிம்மதி' போன்ற இவரது நாடகங்கள் அதிகம் பேசப்பட்டன. அவை தவிரவும் ஒளிவிழா போன்ற நிகழ்வுகளுக்கு தனது பங்கில் பல நாடகங்களை நெறிப்படுத்தினார்.






**சிறைச்சாலையில்...**

சிறைச்சாலை அதிகாரியாக பணியாற்றிய இவர், சிறைக் கைதிகைளைக் கொண்டே நாடகங்களை மேடையேற்றினார்.அவர்களும் மனிதர்கள் என்ற வகையில் அவர்களை ஆற்றுப்படுத்தவதற்கு நாடகங்களை பயிற்றுவித்து மேடையேற்றினார். 'சீர்திருந்திய கைதி', 'சங்கிலியன்' போன்ற நாடகங்களை கைதிகளுக்குப் பயிற்றுவித்து விசேட அனுமதி பெற்று அவர்களை வெளியே கொண்டு வந்து பல்வேறு இடங்களிலும் அவர்களின் நாடகங்களை மேடையேற்றினார்.

**திருமறைக் கலாமன்றத்தில்...**

மரியசேவியர் அடிகளின் அன்புக்குரிய மாணவனாக அவரிடம் பயின்ற இவர் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரில் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் மன்றத்தின் பெரும்பாலான நாடகங்களில் தனது பங்களிப்பினை வழங்கியுள்ளார். நடிகனாக கல்வாரியில் கடவுள், அன்பில் மலர்ந்த அமர காவியம், பலிக்களம், சாவைவென்ற சத்தியன், களங்கம், கல்வாரிப்பரணி, காவிய நாயகன், கல்வாரி யாகம்...எனப் பல திருப்பாடுகளின் நாடகங்களிலும், நீ ஒரு பாறை, சத்திய வேள்வி, ஞான செளந்தரி, அசோகா, தர்ஷனா, ஸ்பாட்க்கஸ் தலைமைக் கட்டடக்காரன், சத்தியத்தின் தரிசனம், சாகாத மனிதம்.. என ஐம்பதுக்கும் மேற்பட்ட கூத்து, இசை நாடகம், நவீன நாடகம் எனப் பல்வேறு நாடகங்களில் பிரதான பாத்திரமேற்று நடித்துள்ளார்.

அது மட்டுமன்று மரிய சேவியர் அடிகளின் பல நாடகங்களின் உதவி நெறியாளராக பணியாற்றியதுடன் பின்னர் திருப்பாடுகளின் காட்சிகளை நெறிப்படுத்துபவராக மாறினார். பலிக்களம், அன்பில் மலர்ந்த அமர காவியம்... எனப் பல திருப்பாடுகளின் காட்சிகளை இங்கு மட்டுமன்றி ஹப்புத்தளை, மன்னார், முல்லைத்தீவு, கொழும்பு எனப் பல இடங்களுக்கும் சென்று நெறிப்படுத்தினார். அதனை விட மாதொரு பாகம், ஒளவையார், இடமில்லை, சத்தியத்தின் தரிசனங்கள், ஒருதேடல், சாகாத மனிதம் போன்ற பல நவீன நாடகங்களை நெறிப்படுத்தினார்.

வேட உடை விதானிப்பாளனாகவும், அரங்க முகாமையாளனாகவும் பல நாடகங்களில் கடமையாற்றினார். அதனை விட திருமறைக் கலாமன்றத்தின் நிர்வாக உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றி மன்றத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுழைத்த கலைஞனாகவும் திகழ்ந்தார். நாடகப்பிரிவு, ஊடகப் பிரிவு, கவின்கலைகள் பயிலகம், களப்பயிற்சி, வழிபாட்டுப்பிரிவு, வேட உடை ஒப்பனை பிரிவு போன்ற பல பிரிவுகளுக்கு பொறுப்பாளராக இருந்தும் முகாமைத்துவத்திற்கு உதவியும் அளப்பரிய பணிகளை ஆற்றினார். மன்றம் மேற்கொண்ட உள்ளூர் வெளியூர் கலைப் பயணங்களுக்கு தலைமை தாங்கி சென்றவாராகவும் காணப்பட்டார். சிங்களக் கலைஞர்களுடன் உறவைப்பேணி திருமறைக் கலாமன்றத்தின் சமாதானப் பணிகளுக்கும் பாலமாக அமைந்து நின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த அரங்கப் பயிற்றுவிப்பாளனாகத் திகழ்ந்து பல இளையதலைமுறை கலைஞர்களை நாடகக்கலையில் உருவாக்கிய ஆசானாகவும் திகழ்ந்தார். திருமறைக் கலாமன்றத்தின் நிராகரிக்க முடியாத ஆளுமைகளில் ஒருவராகிய இவர் மன்றம் மேற்கொண்ட இந்திய ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப்பயணங்களிலும் கலந்து கொண்டு அந்நாடுகளில் அதிகம் பாராட்டப்பெற்றார்.

**நாடக அரங்க கல்லூரியில்...**

எழுபதுகளின் இறுதியில் குழந்தை ம. சண்முகலிங்கம் உருவாக்கிய நாடக அரங்க கல்லூரி நடத்திய நாடகப்பட்டறைகளில் கலந்துகொண்டு தாசீசியஸ், குழந்தை ம.சண்மகலிங்கம், சி.மௌன குரு, நா.சுந்தரலிங்கம் போன்ற பலரிடமும் பயிற்சி பெற்று தனது நாடக அறிவை வளப்படுத்தியதுடன் நாடக அரங்க கல்லூரியின் கோடை, சங்காரம், உறவு-கள், கூடிவிளையாடுபாப்பா, பொறுத்தது போதும், வெறியாட்டு போன்ற பல நாடகங்களில் நடித்தார். பொறுத்தது போதும் நாடகம் சிறந்த நாடகமாக ஜனாதிபதி விருதினைப் பெற்றதாகும். ஈழத்தின் புகழ்பூத்த பல நடிகர்கள், நாடக ஆசிரியர்களுடன் மிகவும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார்.

"நாடக உலகில் நான் இன்னும் மாணவனே" என்று தன்னைத் தாழ்த்திக் கொண்டு அரங்கச் செயற்பாடுகளில் மிகவும் விசுவாசத்துடன் பணியாற்றியவர். நாடகம் தொடர்பான பல்வேறு கட்டுரைகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திரைப்படங்களில்...**

நாடகங்களில் மட்டுமன்றி பல்வேறு குறும்படங்களிலும் ஆவணத் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.திருமறைக்கலாமன்றத்தின் 'பலிக்களம்' வீடி-யோத் திரைப்படம், அசோகந்தகமவின் 'இவ்வழியால் வாருங்கள்' தொலைக் காட்சித் தொடர், தர்மசேன பத்திராஜாவின் 'In Search of A Road' ஆவணத் திரைப் படம் போன்ற பல படங்களிலும் நடித்துள்ளார்.

**பல்வேறு சமூகப்பணிகள்...**

தான் அறிந்த அரங்கக்கலையை பலருக்கும் கற்பித்த இவர் தனது பங்குத் தளம் மற்றும் புனித சவேரியார் குருத்துவ கல்லூரி, யாழ் மறைக்கல்வி நடு நிலையம், திருவழிபாட்டு நிலையம் போன்றவற்றின் கலைச்செயற்பாடுகளில் வளவாளராக கலந்துகொண்டதுடன், பல நாடகங்களையும் நெறிப்படுத்தினார். அதுமட்டுமன்றி பல்வேறு சமூக கலைச்சேவை அமைப்புக்களிலிருந்து அர்ப்பணிப்புடன் பல பணிகளை ஆற்றினார். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், புனித வின்சன் டிபோல் சபை, பிரதேச கலாசார அதிகார சபை, குருந-கர் பங்குச்சபை, குருநகர் யேர்மன்

**காவலூர் யோவான்**

ஒஸ்லோ ஒன்றியம் போன்ற பல சமூக நிறுவனங்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு சமூகச்செயற்பாடுகளை மேற்கொண்டார். இவர் மேற்கொண்ட பணிகளுக்கான பல விருதுகள் இவரைத் தேடி வந்தன எனலாம். திருமறைக்கலா மன்றத்தின் 'அரங்கவாரிதி', 'கலைஞான பூரணன்' போன்ற விருதுகளும், கலாசார அமைச்சின் 'கலாபூஷண விருது', வடமாகாண 'ஆளுநர் விருது', இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் 'கலைஞான கேசரி' விருது, யாழ்ப்பாணக் கலாசாரப் பேரவையின் 'யாழ்ரத்தினா' விருது, கலாசாரப்பேரவையின் முதுகலைஞர்களுக்கான விருதாகிய 'கலைக்குரிசில்' விருது எனப பல விருதுகளைப்பெற்ற பெருமைக்குரிய கலைஞனாக வாழ்ந்தார். தான் அறிந்த கலையை வாழ்நாள் முழுவதும் இறைவனுக்குரிய பணியாக வரித்துக் கொண்டு தொடர்ச்சியாக இயங்கி வந்த இவரது வாழ்வும் பணிகளும் ஒரு கத்தோலிக்க கலைஞனின் பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றன.

# இலத்திரனியல் கழிவுகள் (e-wastes)



அனைத்து இலத்திரனியல் மற்றும் மின்னியல் கருவிகள் என்பவற்றிலிருந்து உருவாகும் கழிவுகள் இலத்திரனியல் கழிவுகள் அல்லது e–கழிவுகள் என அழைக்கப்படும்.

நவீன தொழில்நுட்பத்தினால் சொகுசான இன்ப வாழ்க்கையை மனிதன் வாழ்ந்தாலும் இத்தொழில்நுட்பத்தினால் என்றுமே ஆபத்து மட்டுமே மிச்சமிருக்கும் என்பதை மறப்பதற்கில்லை. ஆபத்து எனத் தெரிந்திருந்தும் அதனைப் பயன்படுத்துகின்றான் என்றால் அந்த தொழில்நுட்பத்தினாலான அத்தியாவசியம் என்பது தான் அதன் உள் அர்த்தமாகும்.

நவீனம் என்பது காலத்துக்கு காலம் புதுப்பிக்கப்படும் என்ற கருத்தையே உள்ளடக்குகிறது. புதிதாக ஒரு பொருள் வெளிவரும் போது பழைய பொருள் என்ற ஒன்று நிச்சயம் ஒதுக்கப்படும். அவை பெரும்பாலும் குப்பையாக எறியப்படும் அல்லது பழைமை என்ற பெயரில் சேகரித்து வைக்கப்படும்.

பாவித்த தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிகள், கையடக்கத் தொலைபேசிகள், DVD player, CD player, இலத்திரனியல் துணைப்பாகங்கள், சமையலறையில் பயன்படுத்தப்படும் நுண்ணடுப்பு மற்றும் ஆய்வுகூட உபகரணங்களான நுணுக்குக்காட்டிகள், கலோரிமானிகள் போன்றவற்றை e-கழிவுகளாக குறிப்பிடலாம்.

தொழில்நுட்ப சாதனங்கள் எல்லாவற்றுக்குமே காலாவதி திகதி உண்டு. அந்தத் திகதியின் பின்னர் அந்த சாதனத்தை பயன்படுத்துவதால் ஆபத்து மட்டுமே மிஞ்சியிருக்கும்.

குப்பைக்குள் வீசப்படும் இலத்திரனியல் பொருட்கள் கூட அவை பிரித்தெடுக்கப்பட்டு பிளாஸ்ரிக் பொருட்களாக சேகரிக்கப்படுகின்றன. இப்படியாக இன்று உலகில் பல இரத்திரனியல் பொருட்கள் அகற்றப்படாமல் தீங்கு விளைவிக்கும் பொருட்களாகவே உள்ளன. இலத்திரனியல் கழிவுகள் தானே என்று அசட்டையாக இந்த விடயத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். e-கழிவுகள் தான் ஏனைய எல்லா கழிவுகளையும் விட ஆபத்தானவை.

உலகளாவிய ரீதியில் மின்னியல் இலத்திரனியல் பொருட்களை நுகரும் அளவு அதிகரித்து வருகிறது. சுமார் 50 மில்லியன் மெற்றிக் தொன் நவீன கழிவுகள் உலகில் e-கழிவுகளாக காணப்படுகிறது. இவற்றில் 12.5% மட்டுமே மீள் சூழற்சிக்கு உட்படுத்தக் கூடியனவும், பெறுமதி மிக்கனவும் ஆகும். 87.5% கழிவுகளை சேகரித்து வைத்துள்ளார்களே தவிர அவற்றை என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கின்றனர். கையடக்கத் தொலைபேசி, கணணி உதிரிப்பாகங்கள் என்பன தங்கம், வெள்ளி, நிக்கல் போன்ற பெறுமதியான உலோகங்களையும் இரசம், கட்மியம், அந்திமணி, பெரிலியம், ஆசனிக் என்னும் இரசாயனங்களையும் கொண்டவையாகும்.

இவ் இரச வெளியேற்றத்தினால் நுரையீரல் பாதிப்பு, ஒவ்வாமை, கண் எரிச்சல், வாந்தி, இரத்தக்கொதிப்பு, இதயத்துடிப்பு அதிகரிப்பு, தோலில் கொப்புளங்கள், கண்பார்வை குறைதல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றது. இதனைவிட மனித நிறமூர்த்தங்களில் மாற்றம், சிறுநீரகப் பிரச்சினை, மூளையில் அழுத்தம் போன்ற அபாயமான நோய்களும் e-கழிவுகளால் ஏற்படுகிறது. தொலைபேசி பற்றரிகளிலுள்ள கட்மியம் என்னும் இரசாயனம் இரத்தக் கொதிப்பையும், புற்றுநோயையும் ஏற்படுத்துகின்றது. அத்துடன் இலத்திரனியல் கழிவுகளிலிருந்து வெளியேறும் வெப்பம், வாயுக்கள் சூழலுடன் கலந்து சுவாச நோய்களையும், மனிதனுக்கு ஞாபகசக்தி குறைவையும் ஏற்படுத்துகிறது.

நச்சுத்தன்மையான பார உலோகங்களை கொண்டிருப்பதால் e-கழிவுகள் ஆபத்தான கழிவு-களாக பேசல் (Basel) சமவாயத்தினால் 2002ம் ஆண்டிலிருந்து எச்சரிக்கப்பட்டு அவற்றை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து சூழலை பாதுகாக்க முயற்சித்து வருகிறது. நாமும் e -கழிவு-களை இனங்கண்டு அவற்றை சரியான

**அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)**

முறையில் அகற்றி சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

e-கழிவுகளை அகற்றுவதற்காக காணி நிரவுகை (Land fill), சாம்பராக்குதல் (Incineration), மீள்பாவனை (Reuse), மீள்சுழற்சி (Recycle) போன்ற முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

காணி நிரவுகை என்பது மண்ணை அகழ்ந்து தோண்டி பள்ளங்களாக உருவாக்கி அதனுள் e-கழிவுகளை படைகளாக மூடுதல் ஆகும். எனினும் இது சூழலுக்கு அனுகூலமான கழிவகற்றும் முறையாக அமையாது. e-கழிவிலுள்ள நச்சுத்தன்மையான இரசாயன பதார்த்தங்களும் பார உலோகங்களும் மண்ணினுள்ளும், நிலத்தடி நீரினுள்ளும் இலகுவாக கலக்கும்.

சாம்பராக்குதல் என்பது பிரத்தியேகமான தகனமாக்கும் கருவிகளினுள் e-கழிவுகளை இட்டு அதிக வெப்பநிலையில் (770°c - 970°c) எரித்தல் ஆகும். இதனால் கழிவுகளின் அளவு குறைக்கப்படுவதுடன் பெறப்படும் வெப்பசக்தியை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். ஆயினும் எரிக்கும் போது வெளிவரும் நச்சு வாயுக்கள் சூழலை மாசுபடுத்தும்.

மீள் சுழற்சி என்பது வினைத்திறனான e-கழிவு மீள் சுழற்சியாக்கிகள் மூலம் செப்பு, தங்கம், வெள்ளி போன்ற பெறுமதியான உலோகங்கள் மீள பெறப்படும். இம்முறையினால் கையடக்கத்தொலைபேசி, மடிக்கணனி என்பன வேறு வடிவில் மீளவும் பயன்படுத்தப்படுகின்றது.

e-கழிவுகளால் உண்டாகும் சூழல் பிரச்சினைகளும், மனிதர் சந்திக்கும் பாதிப்புக்களும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. எனவே எமது சுற்றாடலையும், எம்மையும், எமது எதிர்கால சந்ததியினரையும் பாதுகாக்க e-கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவோம். தொழில்நுட்ப சாதனங்களையும், இலத்திரனியல் மின்னியல் சாதனங்களையும் அதிக அளவில் பயன்படுத்துவதையும், சேகரிப்பதையும் தவிர்த்துக்கொள்வோம்.

---

# வளரும் பயிரை முளையிலே தெரியும்
## முளையிலேயே கிள்ளி எறியவேண்டிய பிடிவாதக் குணம்



வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பது பழமொழி. இதில் நிறைய உண்மையும், ஆழமான கருத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. குயவன் கை மண் போல் எமது குழந்தைகள் எமது கரங்களில் வந்து பிறக்கின்றார்கள். இவர்களைச் சரியான முறையில் வளர்த் தெடுப்பதென்பது இலகுவான காரியம் அல்ல. சிறந்த பயிற்சிகளின் மூலமே நல்ல ஆளுமையுள்ள குழந்தைகளை உருவாக்க முடியும். பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் முரண்பாடுகளைக் கையாள வெற்றி தோல்விகளைக் கையாள பயிற்சி கொடுக்க வேண்டும். குழந்தைக்கு சாப்பிட, நடக்க கற்றுத்தருவதைப் போலவே தோல்விகளை சந்திக்கவும் கற்றுக்கொடுங்கள். சிறிய வயதிலே தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை வாழ கற்றுக்கொடுக்க வேண்டும்.

எங்களிடம் உறுதியில்லாவிட்டால் பிள்ளைகள் பிடிவாத குணத்துடன் கீழ்ப்படியாமையிலும் , சொல்வழி கேளா மையிலும் வளர வாய்ப்புண்டு. எமது பெற்றோர் பிடிவாத குண முள்ள பிள்ளைகளை எப்படி வளர்த்தெடுப்பது தென்பதறியாது இருப்பதை நாங்கள் காணுகின்றோம்.

பிடிவாதம் பிடிக்கும் குழந்தை மீது பரிதாபப்படவும் கூடாது. அதை கண்டு கொள்ளாமல் இருக்கவேண்டும். தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பது தெரிந்ததும் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு இயல்பாகிவிடும். குழந்தை உங்களிடம் கேட்கிற பொருள் அதற்குத் தேவையா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டியது குழந்தை அல்ல. நீங்கள்தான்.

குழந்தைகள் பிடிவாதம் பிடிக்கிற விடயத்தில் பெற்றோரும் குற்றவாளிகளே. நான் சில அம்மாக்களை சந்தித்திருக்கின்றேன் அவர்கள் பிள்ளைகளுக்கு இல்லை என்று சொல்வதே இல்லை எதைக்கேட்டாலும் வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். இல்லை என்றால் அடம்பிடித்து தனக்கு தேவையானதை பெற்றுக்கொள்கிறார்கள். இந்தப் பிழையான அணுகுமுறைதான் பிள்ளைகள் தவறான் வழியில் வளர காரணமாகிறது. குழந்தைகளுக்கு 'இல்லை' என்கிற வார்த்தையை அழுத்தம் திருத்தமாகச் சொல்லாத வரையில் பெற்றோரின் எந்தக் கஸ்டமுமே பிள்ளைகளுக்கு தெரியாது. மாறாக "இந்தப் பொருளின் விலை அதிகம், அம்மாவிடம் அவ்வளவு பணம் இல்லை" என்பது போன்ற உண்மையான காரணங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளுக்கு பணத்தின் அருமையும், பெற்றோரின் அருமையும் தெரியும்.

பொதுவாக பிடிவாதம் பிடிப்பது குழந்தையின் இயல்புதான். ஏதோ ஒரு பொருளுக்காகவோ என்றைக்கோ ஒருநாள் பிடிவாதம் பிடிக்கிற குழந்தையை நினைத்து பெற்றோர் பயப்படத்தேவையில்லை. அந்தப் பழக்கம் குழந்தை வளர வளர சரியாகிவிடும். ஆனால் சின்ன காரியத்துக்கெல்லாம் பிடிவாதம் பிடிக்கும் போதுதான் பெற்றோர் விழிப்பாக கையாள வேண்டும். விளையாட்டில் கூட சிறு தோல்வியை தாங்க முடியாமல் உடன் விளையாடும்குழந்தைகளை அடிப்பது, கிள்ளுவது, கடிப்பது போன்ற செயலில் ஈடுபடுபவர்கள். காலப்போக்கில் தங்களுக்கு விரும்பியது எதுவும் கிடைக்கவில்லை என்றால் பெற்றோரைக்கூட மதிக்க மாட்டார்கள். பொதுவாகவே வாழ்வில் தவறான முடிவெடுக்கும் பெரும்பான்மையானவர்கள் அதிக பிடிவாத குணமுடையவர்கள் தான். இவர்கள் திருமண வாழ்கையில் கூட தோல்வியே அடைகிறார்கள். பிரச்சினைக்குரிய நபர்களாக மாறிப்

**அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)**

போகிறார்கள். 'வீட்டுப்பாடம் செய்யவே மாட்டேன்' என்கிறான் என்பது பல அம்மாக்கள் சொல்லும் புகார். அட்டவணை போட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம். அதாவது பாடசாலை விட்டு வந்ததும் சாப்பிட இவ்வளவு நேரம், விளையாட இவ்வளவு நேரம், படிக்க இவ்வளவு நேரம, டி.வி பார்க்க இவ்வளவு நேரம், செபிக்க இவ்வளவு நேரம் என்று பிரித்துக் கொடுங்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் அடம் பிடித்தாலும் விடாமல் பழக்கினால் ஒரு சில மாதங்களில் குழந்தை இந்த அட்டவணைக்கு பழகிவிடும்.

**பழக்கங்கள்தான் பண்பாடாக மாறும் என்பதை நினைவில் வையுங்கள்**

- பிள்ளைகள் வாழ்க்கையின் யதார்த்தத்தையும், வேறுபாடுகளையும் புரிந்து கொள்ளும் மொழியில் பேசுங்கள்.
- வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் ஒருபோதும் ஒருவருடன் மற்றவரை ஒப்பிட்டு பேசாதீர்கள்.
- வீட்டில் குழந்தைகள் இருக்கும் போது வன்முறை, காதல், கொலை, களவு போன்றவை நிறைந்த திரைக்காட்சிகளையோ நிகழ்ச்சிகளையோ பார்க்காதீர்கள்.
- பசி என்று குழந்தை சொன்னால் உடனே உணவு கொடுங்கள். அசட்டையிலோ, சோம்பலிலோ, வேறு வேலையிலோ குழந்தையின் குரலை அலட்சியப்படுத்தாதீர்கள்.
- ஒவ்வொரு குழந்தையும் இறைவனின் வரம் அவர்கள் ஒருபோதும் உங்கள் கோபதாபங்களின் வடிகால்கள் அல்ல.
- இது கிடையாது. இல்லை என்று சொல்லுங்கள். தோல்விகளைச் சந்திக்க கற்றுக்கொடுங்கள்.
- எங்களுடைய குழந்தைகள் எல்லாம் வீரியமான விதைகள்தான் அவற்றை நற்கனிகொடுக்கும் விருட்சங்களாக வளர்த்தெடுக்க வேண்டியது பெற்றோரினதும், ஆசிரியர்களினதும், பெரியோர்களினதும் பாரிய பொறுப்பாகும். அப்பொறுப்பை செவ்வனே செய்யுங்கள்.



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

**ஊர்காவற்துறையில் முதல் மகா ஞானொடுக்கம்....**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அமைதியையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்த மிகப் பெரிய தடையாக விருந்த அதே பொது நிலையினர் முற்றாகவே மாறித் தற்போது மகா ஞானொடுக்கச் செயற்பாடுகளுக்குத் தமது முழு ஆதரவையும் பங்களிப்பையும் வழுங்கலாயினர். புனித மரியாள் ஆலயத்தைச் சேர்ந்தவர்களும், புனித அந்தோனியார் ஆலயத்தவர்கள் வழுங்கிய முன்னுதாரணத்தைப் பின்பற்றிச் செயற்பட்டனர். இரண்டு பிரிவினரும் தமக்கிடையே உண்மையான ஒப்புரவும், நல்லுறவும் நிலவுவற்கடையாளமாக தாம் தயாரித்த உணவுப்பண்டங்களையும், அதமது விளைச்சலின் பயன்களையும் ஆயருக்குக் காணிக்கையாக ஆடம்பரமான முறையில் கொண்டுவந்து வழங்கினார்கள். முன்னர் பிரிவினை, போட்டி மற்றும் மோதல்களால் ஏற்பட்ட கோப உணர்வுகளால் ஆங்காங்கே கட்டத்துவங்கப்பட்ட கோயில்கள் எல்லாம் கைவிடப்பட்டன. இதுபோன்ற கோபத்தினால் எடுக்கும் தீடீர் உணர்வுகளால் எடுக்கும் தீர்மானங்கள் எவ்வளவு மடமையானவை என்பதை நன்குணர்ந்தார்கள்.

மகாஞானொடுக்கம் இடம் பெற்றுக் கொண்டிருந்த இவ்விடத்திலிருந்து சற்றுத் தொலைவில் கிட்டத்தட்ட 1000 பேரைக் கொண்ட இன்னுமொரு ஆலயம் இருந்தது. இவர்கள் படிப்பறிவு போதியளவு பெற்றிராத பாமர மக்கள், விவசாயத்தை நம்பியிருந்தவர்கள். இவர்கள் மேற்படி மகாஞானொடுக்கத்தில் பங்குபற்றியிருக்கவில்லை. இங்கு ஊர்காவற்துறையில் பணி ஒரளவுக்கு நிறைவுக்குவரவே ஆயரும் மற்ற மறையுரைஞரும் தமது கவனத்தை இந்தக் கிறீஸ்தவர்கள் பக்கம் திருப்பினர். ஒரு ஞாயிறு தினம் இந்த மறையுரைஞருள் ஒருவர் அங்கு சென்று அங்குள்ள மக்களையெல்லாம் ஒன்றுசேர்த்து அவர்களையும் மகாஞானொடுக்க செயற்பாட்டுக்குள்ளீர்த்து அதன் வழியாக இம்மகா ஞானொடுக்கத்தை இதற்காகச் சற்று நீடித்தனர். இவர்களிடையே மேற்கொண்ட முயற்சிகளும் முன்னைய ஊர்காவற்துறை முயற்சிகளுக்கும்

சற்றும் சளைக்காதவிதத்தில் கை-மேல் பயன் தந்தது. மகாஞானொடுக்கச் செயற்பாடுகளின் நிறைவில் இவர்கள் மத்தியில் அமல அன்னை மரியாளின் பெயரில் ஒரு பக்திசபை ஏற்படுத்தப்பட்டு வயது வேறுபாடின்றி இதில் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டனர். இவர்கள் புனித மரியாள் ஆலயத்தின் இன்னுமொரு பக்திசபையாகச்செயற்படலாயினர். இந்த மகாஞானொடுக்கத்தில் மட்டும் 2200 வளர்ந்தோர் திவ்விய நற்கருணை விருந்தில் பங்குபற்றினர். இப்பகுதியில் வழமையிலும் பார்க்க வித்தியாசமாக தகுந்த ஆயத்தங்களுடன் 100 சிறார்கள் முதல் நன்மை பெற்றனர். மேலும் 350பேர் (இவர்களுள் பலர் வயதானவர்கள்) உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றனர்.

இம் மகாஞானொடுக்கத்தின் பயன் மக்கள் மத்தியில் உண்மையான அமைதியை ஏற்படுத்தியதில் மட்டும் தங்கியிருக்கவில்லை. பலர் குறிப்பாக ஆண்கள் தமது திருமறை செயற்பாடுகளிலிருந்து முற்றாக விலகி வாழ்ந்துவந்தவர்கள் திரும்பவும் திருஅவையில் ஊக்கமுள்ள, செயலாற்றும் உறுப்பினர்களாக வாழத்து வங்கினார்கள் கத்தோலிக்கர் நம்ப வேண்டிய

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

மறையுண்மைகள், கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் (கற்பனைகள்) ஆகியவை பற்றிய முழுமையான அறிவுரைகளும், வழிகாட்டுதல்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறாக இவர்கள் மத்தியில் மறையுண்மைகள் பற்றி நிலவி வந்த அறியாமை வெகுவாகக் குறைந்தது. இவர்[illegible] வழங்கப்பட்ட மறையுரைகள் வழியாக மதம் சம்பந்தமான செயற்பாடுகளிலும், தனி வாழ்கையிலும் இவர்கள் கடைபிடித்து வந்த மூடநம்பிக்கைகளும் பிழையான செயற்பாடுகளும் களையப்பட்டன. மற்றும் குருக்கள் வலியுறுத்திய சில செயற்பாடுகள் - பிறர் பொருட்களைக் கவர்ந்திருந்தால் அவை திருப்ப ஒப்படைக்கப்படவேண்டும், பக்திமுயற்சிகளில் ஈடுபடும் ஆர்வம் வலியுறுத்தப்பட்டது, மக்கள் தங்களிடையே இலகுவில் உடையாத அன்புப்பிணைப்பினை வளர்க்கவேண்டும் போன்றவை. இவற்றையெல்லாம் சாதிப்பதற்கு இறைவ-னின் உதவியும், கன்னிமரியாளின் ஆற்றல் மிக்க பரிந்துரையுமே காரணம் என்று ஆயர் செமேரியாவும் குழுவினரும் சான்று பகர்ந்தனர்.

இறுதியில் ஒக்டோபர் மாதம் 30ம் திகதி புதுவாழ்வு பெற்றுப்பக்திப்பரவசத்தில் மூழ்கியிருந்த மக்கள் புடைசூழ இம் மாபெரும் மனமாற்றம், ஒப்புரவாக்கம் ஆகியவற்றினதும் இம்மாற்றம் நீடித்து நிலைப்பதற்கு அடையாளமாகவும் இறைவனது ஆன்மீக, உலகு சார் ஆசீரின் அடையாளமாகவும் கடற்கரையில் ஒரு சிலுவையினடியில் கருத்தாழம் மிக்க வார்த்தைகள் சமாதானம் - மகா ஞானொடுக்கம் 1857 என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டன.

# சமய சமூக நல்லுறவை வளர்க்கும் இலங்கை கரித்தாஸ் தேசிய நிறுவன பொன்விழா ஆண்டு- 2018




உலக அரங்கில் சமூகப் பணி-களை முன்னெடுத்து செயற்படும் சமய நிறுவனமான கரித்தாஸ் அமைப்பு கத்தோலிக்க சமூக, நீதி, சமாதான சர்வமத சமூகப் பணிகளில் முன்நின்று உழைக்கும் அமைப்பாகும்.

கரித்தாஸ் பணித்தளம் முதலில் ஜேர்மன் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு 157 நாடுக-ளில் பாப்பரசர் தலைமையில் ஆயர்கள் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சமய சமூகப்பணி தொண்டு அமைப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். கரித்தாஸ் என்றால் அன்பு என்னும் பொருள். இதன் பணியில் இன, மொழி, நாடு, மதம் கடந்து வலுவற்ற மக்களை வலுவாக்கி குரலற்ற மக்களின் குரலாக மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனம் என்ற வகையில் மக்களின் பங்களிப்புடன் உதவிகளை சேகரித்து துன்புறும் மக்களின் துயர் தீர்க்கும் பணிகளால் "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" என்னும் நோக்குடன் உலக அரங்கில் காலத்திற்கு ஏற்ற பணிகள், உதவிகள் மேற்கொண்டு வளர்ந்து வரும் சமூக நேயப் பணியகமாகும்.

இலங்கை திருநாட்டில் சமூக தேவைகளைமுன்னுரிமைப்படுத்தி மேதகு ஆயர் அவர்களின் வழிகாட்டலுடன் அருட்தந்தை யோ. பெனான்டோ அவர்களின் தலைமையில் 1968ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் 50வது பொன்விழாவை இலங்கை தேசிய கரித்தாஸ் கொண்டாடி மகிழ்கின்றது.

கரித்தாஸ் நிறுவனம் 13 கிளைகளாக இலங்கை மறைமாவட்ட ஆயர்கள் தலைமையில் இயக்குநர்களின் வழிகாட்டலுடன் சமய, சமூக பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் வெளிப்பாடுகளை மீளாய்வு செய்யும் நோக்கில் கரித்தாஸ் பொன்விழாவினை சகல மறைமாவட்டங்களிலும் கொண்டாடி மகிழ்கின்றது.

கொழும்பை தலைமையக-மாகக் கொண்ட இலங்கை கரித்தாஸ் செடேக் நிறு வனம் ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் தனது தனித்துவ சேவைகளை முன்னெடுத்து தமக்கென தனித்துவமான பெயர் ஒன்றினையும் இணைத்து யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக், வன்னி கரித்தாஸ் கியூடெக், மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயம், மட்டுநகர் கரிதாஸ் எகெட், திருமலை கரித்தாஸ் எகெட், அனுராதபுரம் கரித்தாஸ் செத்சவிய, குருநாகல் கரித்தாஸ் ஜனசத்தா, இரத்தினபுரி கரித்தாஸ் செத்மினி, சிலாபம் கரித்தாஸ்ஜனசவிய, கண்டி கரித்தாஸ் செற்றிக், காலி கரித்தாஸ் செற்கோல், பதுளை கரித்தாஸ் உஸ்கொட், கொழும்பு கரித்தாஸ் செத் சரண என்னும் 13 கிளை நிறுவனங்களாக கரித்தாஸ் இயங்கிவருகின்றது.

இலங்கை கரித்தாஸ் தேசிய நிறுவனப் பொன்விழா பொது விழாவாக 29 நவம்பர் 2018 அன்று அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு தூதுவர்கள், உள்நாட்டு அனுசரணையாளர்கள், மறைமாவட்ட ஆயர்கள், இயக்குனர்கள், பணியாளர்களுடன் ஒன்றினைந்து தேசிய நிலைய இயக்குனர் அருட்பணி மகேந்திர குணதிலக்க தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

கரித்தாஸ் நிறுவனம் காலத்துக்கு காலம் ஏற்படும் அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள், போரின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள், கடற்றொழில், இயற்கை விவசாயம், கூட்டுப்பசளை உற்பத்தி, தோட்டத் தொழில் முன்னேற்றம், மனிதக் கடத்தல் வியாபாரம், சமாதானமும் நல்லிணக்கமும், சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டம், வாழ்வாதாரம், மீள் குடியேற்ற கட்டுமாணம் எனப் பல்வேறு பணிகளை இலங்கை






யின் சகல பாகங்களிலும் நடைமுறைப்படுததி வருகின்றது. மதம், மொழி, பிரதேசம், கலாசாரம் கடந்து பாகுபாடற்ற நற் சமூகத்தை கட்டியெழுப்புவதில் கரித்தாஸ் நிறுவனமானது காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

சமூகப்பணிகளில் இணைந்து வாழ்வாதாரத்திலும், அடிப்டைத் தேவைகளான உணவு, உடை, இல்லிடம், மாணவர் கல்வி, முதியோர் மகிழ்வூட்டல் மூலம் மக்கள் ஒன்றிணைந்த கிராமிய கட்ட மைப்புக்கள் வலுவடையவும், சமூகத் தேவைகளை மக்களே உணர்ந்து அரசசார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டு கிராமிய வளர்ச்சியில் புதிய தலைமைகள் உருவாக்கப்பட்டுள்ளமை இந் நிறுவனத்தின் சிறப்பு அறுவடையின் சாட்சியமாக வெளிப்படுகின்றது.

இப்பணிகளில் இணைந்து பயணிக்கும் முயற்சியாளர்களான மகளிர், இளையோர், சிறுவர், முதி-யோரின் முன்னேற்றத்திற்கு பக்க துணையாக இருக்கும் நல்மனம் கொண்ட உப-காரிகளின் பங்களிப்பு மற்றும் கூட்டு முயற்சியில் பங்கேற்கும் பணியாளர்களின் அர்ப்பணிப்புமே இலங்கை கரித்தாஸ் நிறுவனம் 50வது பொன்விழா ஆண்டில் கால்பதிப்பதற்கு அத்திவாரமாக அமைகின்றது.

## விண்ணக வாழ்வின் 6ம் ஆண்டு நினைவு அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 12 - 10 - 1979 |  | 14 - 11 - 2012 |

குருவாக
18.05.2011

AD97

அமரர்
### அருட்பணி.கீதபொன்கலன் லக்ஸ்மன்

**" மெல்கிசேதேக் முறைப்படி நீர் என்றென்றும் நித்திய குருவாகிய ஆண்டவரே "**

உமது இறையாட்சி பணிக்காக அருட்பொழிவு செய்து நீர் பணிக் குருவாக அழைத்துக் கொண்ட அமரர் அருட்பணி கீதபொன்கலன் லக்ஸ்மன் அடிகளாருக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இவரின் குருத்துவ பணிவாழ்வைக் கருத்திற் கொண்டு கனிவோடு பாவங்களை மன்னித்து நிலை வாழ்வை கொடுத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்

## 3ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 . 03 . 1942 |  | 22 . 10 . 2018 |

அமரர்
### இராயப்பு யோசப்

**"ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு"**

இரக்கத்தின் ஆண்டவரே!

எம்மை நிறைவாக அன்பு செய்து எங்களுக்காக இவ்வுலகில் வாழ்ந்து உமது சீடத்துவத்துக்கு சான்று பகர்ந்த உமது அடியான் இராயப்பு யோசப் மேல் பரிவு கொண்டு பாவங்களை மன்னித்து நிலைவாழ்வைக் கொடுத்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம்.

AD98

13/5, மத்தியூஸ் கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## 3ம் வருட நினைவுகளில் ----



அருட்தந்தை
இராயப்பு மரியநாயகம்
Rev.Fr.Dr.R.MARIYANAYAGAM - OMI

| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 13 . 05 . 1948 | 23 . 10 . 2015 |

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்."
(யோவான் 11:25)

ஆண்டுகள் மூன்றைக் கடக்கிறது...
உங்கள் நினைவுகள் நெருங்கியே வருகின்றன.
உங்கள் நினைவு நாள் மட்டுமே
நினைவூட்டுகின்றது.
நீங்கள் மரித்துப் போனதை!
காரணம், நீங்கள் எம்முடன்
இன்றும் வாழ்கின்றீர்கள்.
அன்பான தந்தையாக,
அரவணைக்கும் தாயாக,
நம்பிக்கைக்குரிய தோழனாய்,
நல்வழிகாட்டியாய் – நற்குருவாய்
உங்கள் சுவடுகள் வாழ்கின்றன!
மறைந்தாலும் ஆகாயத்தை விட்டு நீங்காத
சூரியனைப் போல உங்கள் நினைவுகள்
எப்பொழுதும் எங்களில் இளமையாய்
செழித்திருக்கும்...!
ஆண்டவரில் இளைப்பாறுங்கள்.

AD88

என்றும் உங்கள்
அழியா நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 27 . 09 . 1958 |  | 06 . 11 . 2017 |

"புன்சிரிப்பாலும்
கள்ளமில்லா உள்ளத்தாலும்
எம்மை அன்போடு நேசித்த
உன்னை
எம் இதயங்களில் சுமக்கிறோம்....
உன் ஆன்மா
வான் வீட்டில் உறைந்திட
படைகளின் ஆண்டவரை
மன்றாடுகின்றோம்"

AD99

அமரர்
### செல்வி. தாவீதுராசா ரவிநாயகி

துயர்பகிர்வோர்
அருட்சகோதரி தா. செபமலர் (அ.கா) மற்றும்
உறவுகள்

| முப்பதாவது ஆண்டு நினைவஞ்சலி | ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
|  |  |
| அமரர் | அமரர் |
| **அருளப்பு நேசம்மா** | **மரியான் அருளப்பு** |
| தோற்றம் 12.08.1926 — மறைவு 14.11.1988 | தோற்றம் 18.05.1925 — மறைவு 02.12.2013 |

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

நாள்கள் பல ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபங்கள் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணில் இமை போல எமைக்காத்த
அம்மா, அப்பாவே - உங்கள்
நினைவுகளுடன் என்றும் வாழ்கின்றோம்.

AD96

"அலன்மகால்"
இல. 28, செல்லாச்சி
அம்மையார் வீதி
சுன்னாகம்

தகவல்: அ. வில்லியம் யேசுதாசன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
0779460419

## முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் மாணவர்களுக்கான கருத்தமர்வு

முல்லைத்தீவு மறைக் கோட்டத்தில் தரம் 7,8,9 வகுப்பை சேர்ந்த 210 மாணவர் களுக்கான கருத்தமர்வானது 15.09.2018 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை மறைக்கோட்ட மறைக் கல்வி இயக்குனர் அருட்பணி மரியதாஸ் அடிகளார் தலைமை யில் சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடை பெற்றது.

இக் கருத்தமர்வினை கிளரேசியன் சபை குருக்களும் அருட்சகோதரர்களும் நிகழ்த்தி னார்கள்.

முல்லை மறைக் கோட்ட முதல்வரும் ஏனைய பங்குத்தந்தையர்களும் அருட் சகோதரிகளும் மறையாசிரி யர்களும் இக்கருத்தமர்வில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தமர்விற்கு வேள்விசன் நிறுவனத்தினர் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விண்ணக வாழ்வின் மூன்றாம் வருட நினைவு நாள்



**அன்பான** எம்மை பிரிந்து ஆனதே ஆண்டு மூன்று
ஆசிரியப்பணியை ஆர்வமுடன் நிறைவு செய்தீர்
அறிவுரைகள் அனைவர்க்கும் அன்புடன் பகர்ந்தீர்
அடைக்கல அன்னையிடம் அளவற்ற அன்பு கொண்டீர்
அன்பு கொண்ட அனைவர்க்கும் ஆதாரமாய் திகழ்ந்தீர்
அமைதியாய் அன்னையிடம் அடைக்கலம் சென்றீரோ?

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலிகள்

16.11.2018 மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயம்
காலை 7.15 மணி
17.11.2018 யாழ் அடைக்கல அன்னை ஆலயம்
காலை 5.45 மணி
யாழ் மரியன்னை பேராலயம்
காலை 5.30 மணி
யாழ் அருள் ஆச்சிரமம்
காலை 6.00 மணி

### திருமதி. மெற்றில்டா சோதிமலர் இராசசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை.
யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18. 09. 1938 | 18. 11. 2015 |

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
திருப்பலியில் பங்குகொண்டு செபிக்க வேண்டுகிறோம்.

638/3B பிரதான வீதி
யாழ்ப்பாணம்
021 - 222 6136- 0777733557

மாறா நினைவுகளுடன்
கணவன், மகள், மருமகன்
பேரப்பிள்ளைகள்

## மக்களைச் சிந்திக்கத் தூண்டும்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

வாசிக்கின்ற பழக்கம் இன்று குறைந்து வருகின்றது. வாசிக்கப் பிள்ளைகளைத் தூண்டவேண்டும். வாசிக்காது போனால் சிந்திக்க நேரம் இல்லாது நாங்கள் அழிந்து விடுவோம்.

அன்புராசா அடிகள் இவற்றை எழுத எங்கிருந்து நேரம் எடுத்தார் என்றுதான் நான் யோசித்துப் பார்க்கின்றேன். அடுத்து, வித்தியாசமாகச் சிந்தித்தல் முக்கியமானது. வித்தியாசமாகச் சிந்திக்கும் ஆற்றல் தமிழர்களாகிய எங்களில் அருகிவருகின்றது. மற்றவர்களை இழுத்து விழுத்துவதில் நாம் உலகில் முதலிடம் வகிக்கின்றோம்! மற்றவர்களை நாம் உற்சாகப் படுத்துவதில்லை! சிந்தித்தால் தான் மற்றவர்களின் தேவைகளை அறிந்துகொள்ளலாம். மனிதர்களாகிய எங்களுக்கு சிந்தித்துச் செயலாற்றக் கடவுள் ஆற்றலைத் தந்திருக்கின்றார். இந்த நேரத்தில் அன்புராசா அடிகளாரை வாழ்த்துகின்றேன். தன்னுடைய பணிகள் எல்லாவற்றையும் திறம்படச் செய்து கொண்டு இந்நூல்களைப் படைத்திருக்கின்றார்.

இப்படியான பணிகளை ஊக்குவிக்க, எழுத்தாளர்களை வளர்க்க உருவாக்க துறவற சபைகள் முன்வரவேண்டும். நிறுவனங்களிடமிருந்து பணத்தினைப் பெற்று வெறுமனே திட்டங்களைச் செய்துகொண்டிருக்காமல் மக்களைச் சிந்திக்கச் செய்யவேண்டும். பணம் நிறுத்தப்பட்டால் திட்டங்களும் நின்று விடுகின்றன! இவற்றை விட்டு விட்டு, மக்களைச் சிந்திக்கச் செய்வது எங்களின் முக்கியமான பணி. மக்களுக்கு நன்மையான விடயங்களைச் செய்வதற்கு முன்வாருங்கள் என அழைப்பு விடுத்த யாழ் ஆயர் அன்புராசா அடிகளாரின் நூல் வெளியீடு அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைவதை சுட்டிக்காட்டினார்.

இவ்வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப) அவர்கள் கலந்து சிறப்பித்தார். அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். ஆசியுரையினை யாழ்.மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வர் அருட்கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரும், வெளியீட்டு உரையினை யாழ்.மாகாண அமல மரித்தியாகிகளின் முன்னாள் முதல்வர் அருட்பணி அ.ஜீவேந்திரா போல் அமதி அடிகளாரும் வழங்கினர்.

நூல்களுக்கான மதிப்பீட்டு உரைகளை இலக்கிய வித்கர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களும், ஓய்வுநிலை முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளரும் எழுத்தாளருமான திரு.கே.ஆர்.டேவிட் அவர்களும், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திரு.தி.செல்வமனோகரன் அவர்களும் வழங்கினர். வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம்அடிகளார், யாழ். பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைநெறித் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.சிறிகணேசன், பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்பணி செ.எயின்சிலி றொஷான் அடிகள் உட்பட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இலக்கிய ஆர்வலர்கள், பொது மக்கள் எனப் பலரும் நூல்வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி

### 16 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணி தேசிய சம்பியன்



இலங்கை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 16 வயதிற்கு உட்பட்டோருக்கானஉதைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி இந்த ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளது.

கொழும்பில் நடைபெற்றது இறுதியாட்டத்தில் குருநாகல் அல் குமர் மத்திய கல்லூரியுடன் மோதிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 4 : 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தேசிய மட்டச் சம்பியனானது.

## அரசியல் தலைவர்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தில் இருப்பதோ, அதிகாரத்திற்கு வருவதோ இங்கு முக்கியமல்ல. மாறாக மக்களுக்கு சேவையாற்றுவதும், நாட்டைக்கட்டியெழுப்புவதுமே இங்கு முக்கியமானது.

மக்களிடம் இருக்கும் ஆற்றல்களை உணர்ந்து நாட்டின் மூலதனங்களை அறிந்து எமது அன்புக்குரிய தாய்மண்ணின் எல்லா வளங்களையும் பயன்படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைவருக்கும் ஞானமும், நேர்மையும் மேலோங்கியிருக்கச் செபிக்கின்றோம். இறைவன் இலங்கையை ஆசீர்வதிப்பாராக - இவ்வாறு ஆயர் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருப்பீடம் இயேசுவின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பீடப்பணியாளர்கள் என்று அழைக்கப்பட்டாலும் திருப்பீடம் இயேசுவின் உண்மையான பிரசன்னமாக இருப்பதால் நீங்கள் இயேசுவுக்கே பணி செய்பவர்கள் என்றுகுறிப்பிட்டகுருமுதல்வர் வழிபாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் திருப்பண்டங்களின் புனிதத் தன்மையை பாதுகாக்க வேண்டியதும் உங்கள் பொறுப்பு என்று வலியுறுத்தினார்.

சுமார் 180 பீடப்பணியாளர்கள் பங்குகொண்ட இப்பாசறையை அருட்பணி ஸ்ரீபன் ஜேம்ஸ் அடிகளார் நெறிப்படுத்தியிருந்தார். தீவக மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்பணி ம. டேவிற் அடிகளாரின் வழிநடத்தலில் அருட்பணி எரோனியஸ் அடிகளார் இதனை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## தமிழ் மக்களுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களும் இலங்கையர்கள் என்று உணர்ந்து வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என வலியுறுத்திக் கூறிய பேராயர் இது தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்ற சந்தேகம் தீர்க்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## மலையக மக்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானது

### யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

மலையக மக்கள் ஆயிரம் ரூபா (ரூபா. 1000/-) சம்பள உயர்வு கோரி அண்மைக்காலத்தில் நடத்திவரும் போராட்டம் நியாயமானது என யாழ் கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையக தோட்டத் தொழிலாளர்கள் அன்றிலிருந்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிவந்துள்ளனர்.

குறிப்பாக இலங்கைத் தேயிலை உலகெங்கும் விரும்பி வாங்கப்படும் அளவுக்கு இருந்தது. அது 1 நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையின் வருவாயில் முதலிடத்தில் இருந்தது. அதற்கு முதுகெலும்பாக இருந்து உழைத்தவர்கள் இந்தத் தோட்டத் தொழிலாளர்களே.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய மலையகத் தோட்டத் தொழிலாளர்களது வாழ்க்கை முறை முன்னேறாது இன்றுவரை பின்தங்கிய நிலையில் இருந்து வருவது வேதனையளிக்கின்றது. அவர்களது உழைப்பின் பலாபலன்கள் நாட்டின் ஏனைய மக்களுடைய வாழ்க்கைத்தரம், கல்வி உட்கட்டுமானம் எல்லாமே வளர்ச்சியடைய வழிகோலியபோதும் அவர்களுக்கு அவை எல்லாம் சிறிதளவும் கிடைக்கவில்லை என்பதே யதார்த்தம். கடந்த சில ஆண்டுகளாகத்தான் அவர்களுக்கென்று ஆங்காங்கே சில இடங்களில் தனத்தனி வீடுகள் மேம்பட்ட கல்வி வைத்திய வசதிகள் ஆகியவை கிடைத்தபோதிலும் பெரும்பான்மையானோர் கடந்த 100 வருடங்களுக்கு முன்பிருந்த வாழ்க்கைத் தரத்திலிருந்து முன்னேற முடியாத நிலையில் தான் வைத்திருக்கப்பட்டுள்ள னர். நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய இம்மக்களைப் புறக்கணிப்பது மாபெரும் அநீதி. அரசாங்கமே தலையிட்டு அவர்கள் நியாயமாக கேட்கும் நாளுக்கு 1000/- அடிப்படை சம்பளத்தை வழங்க பொறுப்பானவர்களை கட்டாயப்படுத்த வேண்டும். இதில் அரசாங்கத்திற்கு ஒரு தார்மீக்கடமை யுண்டு.

இதுவரையில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பிராயச்சித்தமாக உடனடியாக அவர்கள் கேட்கும் நாளுக்கு 1000/- அடிப்படை சம்பளம் வழங்கப்படுவதுடன் அவர்களது தேவைகளும் கோரிக்கைகளும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.

வடக்குகிழக்கில் கடந்த சில நாட்களாக இம்மக்கள சார்பில் பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் அமைதி வழிப்போராட்டங்கள் வரவேற்கப்படக்கூடியவையே. தொடர்ந்து நாடெங்கிலும் இதுபோன்ற போராட்டங்கள் அரசு உடனடியாக செயற்படும்படி அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

இவர்களுக்கு உடனடியாக நீதிகிடைக்காவிடில் நாட்டு தலைவர்களும் மதத்தலைவர்களும் எஞ்சிய நாட்டு மக்களும் நிகழ்ந்துகொண்டிருக்கும் ஒரு பாரிய அநீதியின் பங்காளிகளாவர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அரசியல் அதிரடி மாற்றங்கள் மத்தியில் இம்மக்களின் வாழ்வாதார பிரச்சினை அடிபட்டுப்போகாமல் இவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும்படி வலியுறுத்துகின்றோம் இவ்வாறான பல விடயங்கள் பல விடயங்கள் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கரவெட்டி புனித மரியன்னை ஆலய பிரசீடிய விழா அண்மையில் நடைபெற்றபோது பங்குத்தந்தை அருட்பணி அன்ரனிப்பிள்ளை அடிகளாருடன் பிரசீடிய உறுப்பினர்கள்..

ஆசீர் வணிக நிலையம்
அனைத்துவிதமான ஸ்ரேசனறிகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
TEN NATARAJ BOSS Atlas RATHNA
Aseer Vaniga Nilayam
220 A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் | 220 A, K.K.S Road, Jaffna
021 222 5485 021 222 5485
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவுடன்

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.